# சந்திர மண்ணில் விலைமதிக்க முடியாத ரசாயனப் பொருட்கள்

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

மலர் 11
இதழ்:170
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

National Tamil Daily

யாழ்ப்பாணம் ஆடி 17 ஜ: அவ் 16 வெள்ளிக்கிழமை [1-8-69]

முக்கிய அறிவித்தல்

எங்கள் ஸ்தாபனத்தில் முன்பு கடமைபுரிந்த சிலர் போலி சோப்புகளை தந்து ஏமாற்றுவதாக அறிந்தோம். தயவுசெய்து எங்கள் லேபல்களை கவனித்து எங்கள் விற்பனை வாகனங்களில் வாங்கி வழமைபோல் ஆதரவு தருமாறு வேண்டுகிறோம்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்.

ஹூஸ்டன், ஜூலை 31

**அமெரிக்காவின் அப்பல்லோ-11 வீரர்கள் கொண்டு வந்த சந்திர மண்ணில் விலைமதிக்கமுடியாத ரசாயனப் பொருட்கள் இருப்பதாக இன்று ஹூஸ்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது.**

அம்புலியிலிருந்து எடுத்துவரப்பட்ட மண்ணை சந்திர ஆய்வு கூடத்தில் விஞ்ஞானிகள் மிகவும் நுணுக்கமாக இப்போது ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நுண்ணிய கண்ணாடிப் பதார்த்தமும், பளபளப்பான கண்ணாடிப் பதார்த்தமும் கொண்ட ரசாயனப் பொருட்கள் சந்திர மண்ணில் இருப்பதாக அவர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்தமண் ஆராய்ச்சிக் குழுவின் தலைவராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் இருக்கிறார்.

சந்திர மண்ணிலிருப்பது போல பூமியில் இப்படியான ரசாயனப் பொருட்கள் கிடையாதென்றும், இப்படி இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியாதென்றும் இவர்கள் தெரிவித்தனர்.

சந்திரமண் ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

# பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர் திடீர் வேலைநிறுத்தம்

## யூனியன் தலைவர்களை மாற்றியதன் எதிரொலி

யாழ்ப்பாணம், வெள்ளி

**பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்றிரவு 7 மணியிலிருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.**

தொழிற்சங்கத் தலைவர்கள் இருவருக்கு நேற்று உடனடி இடமாற்ற உத்தரவு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்தே திடீரென வேலைநிறுத்தத்தில் ஊழியர்கள் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

சுமார் 225 சாரதிகளும் கண்டக்டர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

இன்றுமுதல் பருத்தித்துறை பஸ் டிப்போவில் அமுலுக்கு வரும் நேரஅட்டவணையை எதிர்த்து நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக ஊழியர்கள் முன்னர் தீர்மானித்திருந்தனர். ஆயினும் நேற்றுத் திடீரென தொழிற்சங்கத் தலைவர்களை வேறு இடத்துக்கு உடனடியாக இடமாற்றத்துக்குள்ளாகியதைத் தொடர்ந்து அதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று முதலே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளார்கள்.

இவ்விருவருக்கும் திடீரென இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது அநீதியானதென தொழிற்சங்கங்கள் இ. போ. ச. முகாமையாளரிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

நேற்றிரவு 7 மணியிலிருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலை...

...லில்லாமல் காத்திருந்து தவித்தனர். இரவு 10-30 மணிவரை பொறுத்திருந்த பிரயாணிகள் பஸ் நிலைய அலுவலகத்தை முற்றுகையிட்டு வேறு பஸ் ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து இரவு 11மணியளவில் வேறு டிப்போவைச் சேர்ந்த பஸ்கள் பருத்தித்துறைப்பகுதிக்கு சேவைக்கு விடப்பட்டன.

வேலைநிறுத்தம் இன்றும் தொடர்ந்து நடைபெறுமென தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்...

# தேசிய

# அமெரிக்க அதிபர் நிக்ஸனுக்கு பாரதத்தில் சிறப்பான வரவேற்பு

புதுடில்லி, ஜூலை 31

**அமெரிக்க அதிபர் திரு. நிக்ஸன் இன்று பிற்பகல் பாலம்விமான நிலையத்தில் வந்திறங்கியபோது அவருக்கு மிகவும் சிறப்பானதோர் வரவேற்பு காத்திருந்தது. திரு. நிக்ஸன் தமது மனைவியுடன் விமானத்திலிருந்து இறங்கியபோது இரு நாடுகளின் தேசியகீதமும் இசைக்கப்பட்டன. 21 பீரங்கிக்குண்டுகள் தீர்க்கப்பட்டன. மரியாதை அணிவகுப்பொன்றும் நடைபெற்றது. திரு. நிக்ஸன் இந்தியாவில் ஒரு நாள் தங்குவார்.**

விமானநிலையத்தில் இந்தியாவின் தற்காலிக ஜனாதிபதி திரு. இதயத்துல்லா, பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி மற்றும் பிரமுகர்களும் அவரை வரவேற்றனர்.

தற்காலிக ஜனாதிபதி திரு இதயத்துல்லா அதிபர் நிக்ஸனை வரவேற்றுப் பேசுகையில், இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் மேலும் பலப்படும் என்றார். நிலவில் இரு மனிதர்களை அமெரிக்கா இறக்கிய மகோன்னத நிகழ்ச்சியைக் கோடிக்...

...தாம் நேருவைக் கேட்டதாகவும் குலைவில்லாத ஓர் எதிர்காலம் ஏற்பட வேண்டுமென்றே தாம் விரும்புவதாக நேரு கூறியதாகவும் அவர் கூறினார். 'நேரு கூறியது இன்று உண்மையாகிக் கொண்டிருக்கின்றது. இந்தத் துறையில் நாம் முயன்று வெற்றி பெற வேண்டும்' என்றார் திரு. நிக்ஸன்.

திரு. நிக்ஸன் இன்று திருமதிகாந்தியுடன் ஆலோசனைகள் நடத்துவார். திருமதி நிக்ஸன் புதுடில்லிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்புவார்.

## "நல்ல பிரஜைகளை உருவாக்குவது ஒவ்வொரு ஆசிரியரினதும் கடமை"

### பொலிஸ் சுப்பிரின்டன் பேச்சு

யாழ்ப்பாணம், வெள்ளி

'இந்த நாட்டின் வருங்காலச் சந்ததியான இளம் சிறார்களை நல்ல பிரஜைகள் ஆக்கும் கடமை ஒவ்வொரு ஆசிரியரையும் சேர்ந்ததாகும்'

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வருடாந்த உடற் பயிற்சிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடபகுதி பொலிஸ் சுப்பிரின்டன்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு.எட்வேர்ட் தலைமையில் இவ் விளையாட்டு விழா நடைபெற்றது. திரு. ஆர். சுந்தரலிங்கம் மேலும் பேசியதாவது:

இன்று மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் அதிகரித்து வருகின்றதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. இப்படியான விளையாட்டுக்கள் மூலம் சகோதரத்தையும் சகிப்புத் தன்மையையும், சமாதானத்தையும் மாணவர்கள் மத்தியில் வளர்த்தால் ஒழுங்கீனத்தையும் காடைத்தனமும் குறையும்.

இல்லங்களிடையே நடைபெற்ற போட்டியில் முதலிடத்தை இராமநாதன் இல்லமும், இரண்டாவது இடத்தை இரத்தினம் இல்லமும் மூன்றும் இடத்தை பொன்னையா இல்லமும் பெற்றன.

சிறந்த விளையாட்டு வீரராக எம். எ. எம்ஸ்: பலீலும், சிறந்த வீராங்கனையாக செல்வி எஸ். நாகலிங்கமும், தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ஆர். சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்கினார். (கா. நி)

## 7 தடவை சிறை சென்றவர் மீண்டும் கைதானார்

யாழ்ப்பாணம், வெள்ளி

தனது பெயரை மாற்றிச் சொல்லி பொலிசாரையே ஏமாற்றமுயன்றாராம். ஏழு தடவை சிறைசென்ற ஒருவர். ஆனால் இவரை பொலிசார் லாவகமாகக் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 11 மணியளவில் யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியில் நடைபெற்றது.

முதலில் தனது பெயரை பொடிமாத்யா என்றும் பின்னர் தர்மசேனா என்றும் கூறி ஏமாற்ற முயன்ற இவரை பொலிஸ்கான்ஸ்டபிள்கள் என். ஈ. இரத்தினமும், டபிள்யூ வால்ட்டருமே கைதுசெய்தார்கள்.

சந்தேகநபரிடமிருந்து வீடுடைக்கும் சில ஆயுதங்களையும் பொலிசார் மீட்டுள்ளனர். இவர் ஏற்கனவே கட்டுகாஸ் தோட்டையில் வீடுடைத்த களவுகள் சம்பந்தமாக 7 தடவை சிறை...

சந்தேகநபர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார். விசாரணை நடைபெறுகின்றது. (கா. நி)

## மாணவனின் பரிதாப மரணம்

பருத்தித்துறை, வியா.

பருத்தித்துறை துறைமுகத்தில் தற்போது தங்கி நிற்கும் அமெரிக்க கப்பல் ஒன்றைப் பார்வையிட்டு விட்டு கரைக்குத் திரும்பிக் கொண்டிருந்த 18 வயது நிரம்பிய மாணவர் ஒருவர் பெரும் அலைகளில் சிக்குண்டு மரணமானார்.

மரணமான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் ரி. இராஜேஸ்வரன் இவ்வாண்டு அக்டோபரில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். மரணத்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யில், இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் மேலும் பலப்படும் என்றுர். நிலவில் இரு மனிதர்களை அமெரிக்கா இறக்கிய மகோன்னத நிகழ்ச்சியைக் கோடிக்கணக்கான உலக மக்களோடு சேர்ந்து பாரத மக்களும் கேட்டு மகிழ்ந்தார்கள் என்றும் திரு. இதயத்துல்லா கூறினுர்.

திரு. நிக்ஸன் தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு ப்திலளிக்கையில், 'நிலவில் மனிதர்களை இறக்கிய நிகழ்ச்சி பற்றி அமெரிக்கர்கள் பெருமை கொள்கிறுர்கள். மனித சமுதாயத்தின் மாபெரும் வெற்றி என்பதினுலேயே இந்தப் பெருமை ஏற்படுகின்றது' என்றுர்.

பதினுறு ஆண்டுகளுக்கு முன்னர் தாம்இந்தியாவுக்கு வந்ததைதிரு. நிக்ஸன் நினைவு கூர்ந்தார். இந்தியாவுக்கும் அண்டை நாடுகளுக்கும் எம்மாதிரியான எதிர்காலம் இருக்க வேண்டும் என்று வேண்டுமென்றே தாம் விரும்புவதாக நேரு கூறியதாகவும் அவர் கூறினுர். 'நேரு கூறியது இன்று உண்மையாகிக் கொண்டிருக்கின்றது. இந்தத் துறையில் நாம் முயன்று வெற்றி

## நிக்ஸனுடன் இந்திரா 90 நிமிட பேச்சு

புதுடில்லி ஜூலை 31

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இன்று பிற்பகல் அமெரிக்க ஜனுதிபதி திரு. நிக்ஸனுடன் முதல் சுற்றுப்பேச்சு வார்த்தையை நடாத்தினுர். இந்தப் பேச்சு வார்த்தை 90 நிமிட நேரம் நீடித்தது.

பேச்சு வார்த்தையை அடித்து ஸ்ரீமதி இந்திரா நிருபர்கள் மத்தியில் பேசினுர். பல்வேறு விஷயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், வியட்னும் முக்கிய விஷயமாக இடம் பெற்றதாகவும் இந்திரா கூறினுர். பேச்சுவார்த்தை நாளை காலை தொடர்ந்து நடைபெறும்.

இன்று நிக்ஸன் தம்பதிகள் ராஜ்காட்டுககுச் சென்று மகாத்மா காந்தியின் சிலைக்கு மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினுர்கள். நாளை ஜனுதிபதி பாக்கிஸ்தானுக்குச் செல்கிறுர்.

திருமதிகாந்தியுடன் ஆலோசனைகள் நடத்துவார். திருமதி நிக்ஸன் புதுடில்லிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தைப் போய்ப் பார்த்துவிட்டுத் திரும்புவார்.

# 'விஞ்ஞான அறிஞர்கள் வெளியே செல்வது நாட்டுக்கு நஷ்டம்'

## சர்வதேச நாணய நிதிஅதிகாரிகூறுகிறுர்

(அளவெட்டி நிருபர்)

''நேரத்துக்கு நேரம் கிடைக்கும் புதியவிஞ்ஞான ஆராய்ச்சி முடிவுகளைத் தாங்கி மேலை நாடுகளில் இருந்து வரும் அத்தனை நூல்களையும் தாய் மொழியில் பெறுவது கஷ்டமானது. செலவு அதிகம் பிடிக்கும்; காலதாமதம் ஏற்படும்; தெளிவும் குறையும். இலங்கையின் கல்விக் கொள்கைகளை அமைப்பவர்கள் விஞ்ஞான வளர்ச்சிக்காக வாரஏடு ஒன்றை மும்மொழியிலும் வெளியிடுதல் மிகவும் சிறந்தது.''

இவ்வாறு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுஉரையாற்றிய சர்வதேச நாணய நிதி ஆசிய திணைக்கள தூரகிழக்குப் பிரிவின் உதவி நிர்வாகத் தலைவர் திரு. ச. ச. கணேசதாசன் கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''கல்வியின் இன்றைய தேவை பற்றி சிந்திக்குமிடத்து நாம் கற்கும் கல்வி இலங்கையின் பொருளாதார விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும். விஞ்ஞான தொழில் நுட்ப கல்விதான் வேலையின்மையைக் கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை வளம்படுத்தும் தொழில்நுட்ப கல்வி மூலம் கைத்தொழில் சிறப்படைந்து நாடு செழிக்கும். விஞ்ஞானத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் இலங்கை எவ்வளவு பின்தங்கியுள்ளதென்பதை அறியலாம். இங்கு விஞ்ஞானம் வளர்ச்சி யடையாததற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று இரசாயன பரிசோதனை கூடங்கள் இல்லாதது. படிக்கும் பாடங்களை சரிவரப் புரிய பரிசோதனை அவசியம். இரண்டாவது புத்தக வசதியின்மை முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் புத்தக வசதிக்கான நூல்நிலையங்கள், விஞ்ஞான பொருட்காட்சிச் சாலைகள், டெலிவிஷன், வானுெலிக் கருவிகள் பெரும் உதவி செய்கின்றன. இப்படியாக இலங்கையில் மாவட்டத்துக்கு குறைந்தது ஒருநூல் நிலையம் (விஞ்ஞானம்) பொருட்காட்சிச்சாலை, பெரிய விஞ்ஞான ஆய்வு கூடம் அமைத்து கல்வி புகட்டினுல் தான் நாடு முன்னேற்றமடையும்.

பெரும் விஞ்ஞானஅறிஞர்கள் இலங்கையை விட்டு வெளியேறி பிறநாடுகளில் வசதியுடன வாழ்வதையும் காண்கிறேம். இதனுல் இலங்கை நஷ்டமடைகிறது. இதை உடனடியாகத் தடுத்துவிடமுடியாது. அத்தகைய அறிஞர்கள் பெற்ற விஞ்ஞான அறிவை ஒரு சில மாதங்களுக்காவது இலங்கை மக்கள் பயன் பெறும் வகையில் உதவ இலங்கை விஞ்ஞான நிபுணர்கள் விரும்புவதாகத் தெரிகிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகள், ஆய்வுகூடம், பரிசோதனை நிலையங்கள் அமைத்து ஆவன செய்ய இலங்கை அரசாங்கம் உடனடியாக செயலில் இறங்க வேண்டும்.''

வெற்றியீட்டியவர்களுக்கு திருமதி. கணேசதாசன் பரிசில்கள் வழங்கினுர்.

யூனியன் கல்லூரி பழைய மாணவரும் காங்கேசன் துறைப் பகுதிக் கல்வியதிகாரியுமான திரு. க. சோமசுந்தரம் நன்றிகூறினுர்.

இதை அடுத்து கல்லூரி மாணவர்களின் தமிழ், ஆங்கில நாடக, நடன, கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வேறு இடத்துக்கு உடனடியாக இடமாற்றத்துக்குள்

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வியாழன்

இன்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபையின் 257-வது சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதலாவது பரிசு

01 A 0523 ரூ. 100,000

இரண்டாவது பரிசு

44 T 0042 ரூ. 40,000

மூன்றுவது பரிசு

30 F 0611 ரூ. 10,000

தலா 558 ரூபா பெறும் 100 டிக்கெட்டுகளின் இலக்கங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| 22 A 1314 | 33 A 0591 |
| 24 B 0438 | 10 B 0282 |
| 25 B 0888 | 07 C 0083 |
| 06 C 0541 | 05 C 0841 |
| 32 D 0671 | 36 E 0162 |
| 05 E 0835 | 40 E 0452 |
| 16 E 0837 | 37 E 0525 |
| 32 E 0397 | 36 E 0267 |
| 43 F 0756 | 32 G 0179 |
| 11 G 0943 | 40 G 0271 |
| 27 G 0573 | 40 H 0089 |
| 29 H 0608 | 09 H 0127 |
| 36 H 0336 | 33 J 0061 |
| 09 J 0185 | 26 K 0605 |
| 25 K 0831 | 14 K 0092 |
| 21 L 0396 | 06 L 0582 |
| 42 M 0982 | 21 M 0582 |
| 30 M 0346 | 21 M 0829 |
| 22 M 0543 | 39 N 0786 |
| 22 N 0905 | 05 N 0191 |
| 17 N 0632 | 37 O 0225 |
| 18 O 0934 | 17 O 0485 |
| 31 O 0284 | 03 O 0387 |
| 34 O 0211 | 13 P 0611 |
| 08 P 0887 | 03 P 0332 |
| 41 P 0828 | 11 P 0263 |
| 36 Q 0024 | 40 Q 0821 |
| 37 Q 0462 | 35 Q 0236 |
| 13 Q 0239 | 30 Q 0012 |
| 21 Q 0362 | 27 Q 0693 |
| 28 Q 0984 | 21 R 0427 |
| 35 R 0271 | 41 R 0667 |
| 19 R 0103 | 01 R 0100 |
| 29 S 0938 | 05 S 0579 |
| 08 S 0272 | 02 S 0452 |
| 31 S 0467 | 23 T 0523 |
| 34 T 0773 | 29 T 0797 |
| 43 T 0947 | 29 T 0156 |
| 10 T 0657 | 26 T 0954 |
| 22 T 0448 | 29 T 0028 |
| 30 U 0821 | 22 U 0851 |
| 44 U 0025 | 43 V 0005 |
| 30 V 0299 | 20 W 0629 |
| 04 W 0316 | 09 X 0803 |
| 43 X 0216 | 37 X 0532 |
| 24 X 0308 | 42 Y 0748 |
| 12 Y 0983 | 39 Y 0070 |
| 38 Y 0196 | 38 Y 0177 |
| 23 Y 0155 | 39 Z 0814 |
| 12 Z 0701 | 03 Z 0625 |

தென தொழிற்சங்கங்கள் இ. போ. ச. முகாமையாளரிடம் ஆட்சேபம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

நேற்றிரவு 7 மணியிலிருந்து யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பருத்தித்துறைப் பகுதிக்குச் செல்லும் ஏராளமான பிரயாணிகள் பஸ் யளவில் வேறு டிப்போவை சேர்ந்த பஸ்கள் பருத்தித்துறைப்பகுதிக்கு சேவைக்கு விடப்பட்டன.

வேலைநிறுத்தம் இன்றும் தொடர்ந்து நடைபெறுமென தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

டருமே கைதுசெய்தார்கள். சந்தேகநபரிடமிருந்து வீடுடைக்கும் சில ஆயுதங்களையும் பொலிசார் மீட்டுள்ளனர். இவர் ஏற்கனவே கட்டுகாஸ் தோட்டையில் வீடுடைத்த களவுகள் சம்பந்தமாக 7 தடவை சிறை சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

# கிழக்கு ரயில்சேவை சீர்குலைவு தண்டவாளத்தில் நாசவேலை

கொழும்பு, வியாழன்

கிழக்கு மாகாணத்தில் ரயில் சேவை பாதிக்கப்பட்டுள்ளது. தண்டவாளம் திடீரென இன்று காலை தீப்பற்றி எரிந்ததால் இச்சீர்குலைவு ஏற்பட்டது. இது திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட நாசவேலை எனச் சந்தேகிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ரயில்வே நிலையத்திலிருந்து 154 மைல் கல்லில் தண்டவாளம் இன்று காலை திடீரென தீப்பறிக்கொண்டது. இதனைத் தொடர்ந்து கிழக்கு மாகாண ரயில் சேவை பாதித்தது.

இத் தீவிபத்துக் குறித்து இரகசியப் பொலிசார்புலன் விசாரணை செய்து கொண்டிருக்கின்றனர். இது திட்டமிட்டுச் செய்யப்பட்ட ஒரு சதியென அவர்கள் கருதுகின்றனர். இது சம்பந்தமாகச் சிலர் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

ரயில் சேவை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தற்காலிகமாக வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொலநறுவையிலிருந்து மன்னம்பிட்டியாவரை பஸ்ஸில் பிரயாணிகள் செல்லுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

## நள்ளிரவில் தாக்குதல்: நால்வர் படுகாயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நள்ளிரவு நேரம் வீட்டுக்குள் படுத்திருந்த ஒரு குடும்பத்தினர் இனம் தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்டார்களாம். இதனுல் படுகாயமடைந்த நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச்சம்பவம்நேற்றிரவு மாங்குளம் பகுதியில் நடைபெற்றதாக பொலிஸுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த் தந்தையான தம்பையாவும், மகனுன செல்வநாயகமும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்றிருவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

சந்தேக நபர் எவரும் கைதாகவில்லை. கிளிநொச்சி பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

## நாவலர் சந்தி கொலை முயற்சி வழக்கில் எதிரிக்கு 5 வருட கடூழியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவலர் வீதி கொலை முயற்சிவழக்கில் விசாரணை நடுவில் எதிரி கைமோசக் கொலைமுயற்சிக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து ஜூரி சபையினர் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் எதிரி கூறியதைதாங்கள்ஏற்றுக் கொள்ளவில்லையெனத் தெரிவித்தனர்.

இதன்பின் விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு ஓ. எல் டி கிறெஸ்டர் முன்னிலையில் இவ் வழக்குநேற்று விசாரணை செய்யப்பட்டது.

இவ் வழக்கில் யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் 67-ம் வருடம் ஜூலை 26.ம் திகதி பொன்னையா சின்னராசா என்பவர் கதிரிப்பிள்ளை ராசா என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வக்கேட் ஆர்.முத்துக்கிருஷ்ணன் ஆஜராணுர்.

கதிரிப்பிள்ளை ராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் நான் நாவலர் வீதி வழியாக நடந்து கொண்டிருந்தபோது எதிரி பின் புறமாக ஓடிவந்து என் சேட்டைப் பிடித்தார். அவர் பின் கத்தியெடுத்துக் குத்தினுர். நான் ஒன்றும் செய்யவில்லை. இரண்டாம் முறையும் குத்தினுர். மூன்றும் முறையும் குத்தியபோதுஅவரைப் பிடித்துக் கொண்டு ஐயோ! ஐயோ என்று கத்தினேன் ரத்தினம் என்பவர் ஓடிவந்து கத்தியைப் பறித்தார். எதிரி ஓடிவிட்டார்.

விசாரணை முடிவில் ஜூரி சபையினர் தனிமையில் மந்திராலோசனை செய்தபின் எதிரி கைமோசக் கொலை முயற்சிக் குக்றவாளியென ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். இதைத் தொடர்ந்து எதிரிக்கு நீதியரசர் 5 வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

அசைஸ் விசாரணை இன்று காலை வரை ஒத்திவைக்கப் பட்டது.

மரணமான பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் ரி. இராஜேஸ்வரன் இவ்வாண்டு அக்டோபரில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தார். மரணத்திற்கு முதல் தினம் ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடந்த விளையாட்டுப் போட்டியில் இவர் கொழும்பில் நடக்கவிருக்கும் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் பங்கு பெறத் தெரிவு செய்யப் பட்டார்.

## கல்விநூற்றுண்டு நிகழ்ச்சிகள் இன்று ஆரம்பம்

கோட்டை, வியாழன்

கல்வி நூற்றுண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் நாளை நாடெங்கிலும் ஆரம்பமாகிறது. கொழும்பில் இதன் முக்கிய நிகழ்ச்சிகளை பிரதமரும், கல்வி அமைச்சரும் தொடக்கிவைக்கிறுர்கள். கொழும்பு பெரிய தபால் கந்தோரில் விழாவையொட்டிய முத்திரையும் வெளியிட்டு வைக்கப்படும்.

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை திரு.க.கி.நடராசா அவர்களால் பெரிய புராண பிரசங்கத் தொடரில் சுந்தரர் - பரவையார் சந்திப்பு என்னும் பொருள் பற்றிய பிரசங்கமும் இரவு 7 மணிக் சுக்கிரவார அம்மன் உற்சவமும் நிகழும்.

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு - சித்தங்கேணி பிரதான வீதி விஸ்தரிக்கப்படுகிறது. இப்பாதையில் இரட்டைத்தட்டு பஸ்கள் செல்ல வசதிசெய்யுமுகமாகவே இவ்வேலை நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### இ. வை. இராமலிங்கம்

மானிப்பாய் இ. வை. இராமலிங்கம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் அருமைக்கனவரும், இ. இராஜரத்தினம் (ஓய்வுபெற்ற கூட்டுறவு சிரேஷ்ட ஆணையாளர்), திரு. கனகரத்தினம், திருமதி நல்லசேகரம்பிள்ளை, திருமதி குமாரசாமி, திருமதி பாலரத்தினம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. செ. வைரமுத்துவின் மைத்துனருமாவார். இறுதி கிரியைகள் இன்று (1-8-69) காலை 11 மணியளவில் நடைபெறும்.

மானிப்பாய்.
31-7-69

இ. இராசரத்தினம்
1433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

முந்திரிகைக் கன்றுகள் (திராட்சை) மிகவும் இனிப்பான இஸ்ரவேல் கறுத்த இன திராட்சைக் கன்றுகள் விற்பனைக்கு உண்டு இந்த இனத்தைத் தவிர வேறு நல்ல இனம் இப்பொழுது இலங்கையில் இல்லை. விலை ரூபா 2 - இ. ஞானபண்டிதன், சன்னதி ஒழுங்கை, தொண்டமனாறு. 1278

மில்:

யாழ்ப்பாணம், பசாரில் 25 மூடை அரிசி விற்கக் கூடியதும், மிளகாய், கடலை அரைக்கக் கூடியதும், 50 புசல் நெல் காயக்கூடியதும் அவியல் டாங்கி, உமி அடுப்பு உள்ளதுமான மில் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு, அ. தருமலிங்கம் உரும்பிராய் வடக்கு உடும்பிராய். 1285

அலுமாரி:

மருந்துச்சரக்கு போடும் வேப்பம் அலுமாரி, உயரம் 4 அடி, நீளம் 7 அடி 3 அங்குலம், அகலம் 2 அடி 4 அங்குலம், 24 லாச்சிகள் கொண்டது. தொடர்பு கொள்ளவும் திருமதி எஸ். ஆர். பீற்றர், பிரதான வீதி, இளவாலை. 1288

### தேவை

அஞ்சல் அதிபர் தந்தியாளர் நியமனப் பரீட்சைக்கான வகுப்புக்கள் இலங்கை புவியியல் பட்டதாரியாலும், வேறு அனுபவம் வாய்ந்த பட்டதாரிகளாலும் நடத்தப்படுகின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 1284

### வாடகைக்கு

பெரியகடைக்கு அண்மையில் தண்ணீர் மின்சார வசதிகள் அடங்கிய வீட்டில் பங்காக இருப்பதற்கு வசதியாக அறையும் குசினியும் வாடகைக்கு உண்டு. 32/2, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். 1287

### கல்வி

மெக்கானிக் பாடங்கள்:

29-8-69 தொடக்கம் ஆரம்பமாகவிருக்கும் எமது ஏழாவது ஒரு வருட முழு நேர மோட்டார், டிராக்டர், டீசல் பயிற்சி வகுப்புகளுக்கும் துரித சாரதிப் பயிற்சி வகுப்புகளுக்கும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும் அன்றி நேரில் தொடர்பு கொள்ளவும். அதிபர் ஸ்ரீராஜ் ஓட்டோமொபைல் என்ஜினியரிங் நிறுவனம், 11 A / 11 B, மொம்சாக் மாளிகை மேல்மாடி, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 1286

## வண்டிச் சவாரிப் போட்டி முடிவுகள்

மூளாய் வியாழன்

பொன்னாலை நெல்லியான் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிமுடிவுகள் பின்வருமாறு:

ஏ, பிரிவு பொ சங்கரப்பிள்ளை, மயிலிட்டி, சி.சோமசுந்தரம் பொன்னாலை இ. பெரியதம்பி, சுன்னாகம்.

பி. பிரிவு:- கி. பொன்னம்பலம், மூளாய், ஆ. நாகலிங்கம் மூளாய், க. சின்னத்தம்பி சுதுமலை.

டாக்டர் என்.ரி. சம்பந்தன் நிகழ்ச்சிகளுக்குதலைமை வகித்து பரிசில்களை வழங்கினார்.

சு. கந்தசாமி, ஏ. ஜே.எம் மயில்வாகனம் கிராமசபை உறுப்பினர், ஆகியோர் உரையாற்றினர்.

## புதிய முத்திரைகள்

வத்தளை, வியாழன்

தொல்பொருளாராய்ச்சி இலாகாவும், கல்வி இலாகாவும் இரு பகுதியினதும் நூற்றாண்டு விழாவையொட்டி ஆகஸ்ட் முதலாந்திகதி ஆறு புதிய முத்திரைகளை வெளியிடவுள்ளன.

# அகில இலங்கை ரீதியில் 15 மைல் மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், வெள்ளி

திருநெல்வேலி சிவன் ஸ்போர்ட்ஸ் கிளப் பின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கின்றன.

அன்று காலை அகில இலங்கை ரீதியான 15 மைல் மரதன் ஓட்டப் போட்டி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வெற்றி பெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும், ஓடிமுடிக்கும் ஒவ்வொருவருக்கும்நற்சான்றிதழ்களும் வழங்கப்படவிருப்பதாக சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

விளையாட்டுப் போட்டிகளுக்கான சகல ஒழுங்குகளையும் சங்கத்தலைவரான யாழ். நகர உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமையிலான குழு கவனித்து வருகின்றது.

11-ம் திகதி மாலை திருநெல்வேலி சிவன் அம்மன் கோவில் வீதியில் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளும், விநோத உடைப்போட்டியும் நடைபெறவுள்ளது. அன்றிரவு மேயர் திரு. எஸ்.நாகராஜா தலைமையில் பரிசளிப்பு வைபவமும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

(தே. நி.)

## பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இல்லப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த விளையாட்டு இல்லப்போட்டிகளில் சில முடிவுகள் வருமாறு:

### 100 மீட்டர் ஓட்டம்

அதிமேற்பிரிவு- அன்னரேஸ்செற் ஜெபமாலை, புஸ்பம் பொன்னுத்துரை, தவமணி தேவராசா.

மேற்பிரிவு- புவனேஸ்வரி செல்லத்துரை, தனலட்சுமி கோவிந்தசாமி, கனகமணி மதியாபரணம்.

மத்திய பிரிவு- குணேஸ்வரி கோவிந்தசாமி, அமிர்தராணி நடேசு, சோதீஸ்வரி கோவிந்தசாமி.

கீழ்ப்பிரிவு- புஸ்பராணி கிருஷ்ணர், புவனேஸ்வரி கந்தையா, நாகேஸ்வரி மாணிக்கம்.

### குண்டு எறிதல்

மேற்பிரிவு- இரத்தினேஸ்வரி சின்னப்பு, உருக்குமணி நாகமுத்து, ஈஸ்வரி வீரசிங்கம்.

மத்திய பிரிவு- கலைவாணி செல்லத்துரை, நாகேஸ்வரி கிருஷ்ணர், சுமனு விக்கிரமசிங்கா.

### பரிதி வட்டம் எறிதல்

மேற்பிரிவு- ஜெகதீஸ்வரி பாலசுப்பிரமணியம், மனோன்மணி முருகேசு, இரத்தினம்பாள் பக்கிரிசாமி.

மத்திய பிரிவு- சுமனு விக்ரம சிங்கா, இராசவதி நடராசா, கவுரி கணவதியார்.

### நீளம்பாய்தல்

மேற்பிரிவு- புவனேஸ்வரி செல்லத்துரை. கனகமணி மதியாபரணம், தனலட்சுமி கோவிந்தசாமி.

கீழ்ப்பிரிவு- மங்கையரக்...

கீழ்ப்பிரிவு- தயாளு சங்கரப்பிள்ளை, கவுசலாதேவி தர்மலிங்கம், மேரி கிறிஸ்தோப்பர்.

### 400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

கீழ்ப்பிரிவு- கிருபை, கில்லீஸ் புளோரு.

மத்திய பிரிவு- கில்லீஸ், கவ்வுலன், கிருபை.

மேற்பிரிவு- கவ்வுலன், கிருபை கில்லீஸ்.

## ஹாக்கி போட்டி

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற ஹாக்கிப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது.

## 70,000 பேர் குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றனர்

கோட்டை, வியா.

ஏறக்குறைய 70,000பேர் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஏற்றுள்ளார்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. குடும்பக் கட்டுப்பாடுபற்றி கிராமப்புறங்களில் செய்த பிரச்சாரத்தின் காரணமாகவே பெரும் தொகையினர் குறுகிய காலப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்தமைக்கு காரணம் எனச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள்தெரிவித்தன.

## [illegible] விழா

வெள்ளவத்தை, வியா.

ஸ்ரீமாவோ எச்சரிக்கிறார்:

# 'எங்கள் மதத்துக்கும் இனத்துக்கும் ஆபத்து'

மாவனலை, வியாழன்

'நாங்கள் மிக அபாயகரமான நிலையில இருக்கிறோம். எங்கள் மதத்துக்கும் இனத்துக்கும் அபாயம் நெருங்கிவிட்டது'. எங்களிடம் இருந்த அரசை எந்த மக்கள் பறித்து ஐக்கியதேசியக் கட்சியிடமளித்தார்களோ அவர்களே அரசாங்கத்தில் வெறுப்படைந்து விட்டதோடு மட்டுமன்றி மதத்தைக் காப்பாற்றுவதற்காக எங்கள் ஆதரவைத் தேடினார்கள்' பொய்ப்பிரசாரங்களையிட்டு நீங்கள்கவனமாக இருக்கவேண்டும்..

மல்ப ராஜகிரி விகாரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா பேசுகையில் மேற்கண்டவாறுதெரிவித்தார்

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

இப்பொழுதுள்ள அரசாங்கத்தின் தலைவர்கள் சங்கத்தைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். இதனால்சங்கத்தினர் பௌத்தத்தை இந்த அரசாங்கம் பாதுகாக்கமாட்டாது என்பதைஅறிந்து விட்டார்கள். காலஞ் சென்ற எனது கணவரே பௌத்தத்துக்கும்பௌத்த கலாச்சாரத்துக்கும் கொடுக்கவேண்டிய இடத்தை கொடுத்து இருந்தார். அவரது கொள்கையில் இருந்து நாங்கள் விலகமாட்டோம். அவரது கொள்கைகளை நிறைவேற்றுவதே எங்கள் நோக்கமாகும்

## நயினாதீவு தமிழரசு கிளை நிர்வாகிகள்

நயினாதீவு, வியாழன்

நயினாதீவு, தமிழரசுக் கட்சிக் கிளை பொதுக் கூட்டம் திரு. அ. நல்லையா தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினமும் சமுகமாக இருந்தார். கூட்டத்தில் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. அமிர்தலிங்கம். உபதலைவர் திரு. கா. ஆறுமுகம். காரியதரிசி திரு. அ. நல்லையா. உபகாரியதரிசி மு.ச. திருநாவுக்கரசு. தனாதிகாரி திரு. சி. க. பொன்னையா.

## நல்நோக்க இயக்கம்

சுழிபுரம், வியாழன்

கட்டுவன் மயிலிட்டி தெற்கு வருத்தலைவிளான் பகுதியில் 'நல்நோக்க இயக்கம்' என்ற பெயருடன் ஒரு இயக்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது நடப்பு ஆண்டு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. ச.கந்தவனம், உபதலைவர்: மு. கணேசதேவன், இணைக்காரியதரிசிகள்: த. து. ஜெகநாதன், சி. சிவநாதன், பொருளாளர்: வ. ஜெயராசசிங்கம், ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும்தெரிவுசெய்யப்பட்டது.

## பாகவதருக்கு பாராட்டு

உடுவில், வெள்ளி

அமெரிக்கா தேசத்தில் இசைப்பேராசிரியராக கடமையாற்ற செல்லஇருக்கும் திரு.கல்யாண கிருஷ்ணபாகவதருக்கு உடுவில் கிராமசபை திறந்த வெளியரங்கில் சேவை பாராட்டு விழா இன்று அளிக்கப்பட விருக்கிறது.

## அதிபருக்கு பாராட்டு

சுன்னாகம், வியா.

'நாட்டுப்புறக் கல்லூரியை அதி உன்னத கல்லூரியாக உயர்த்துவதற்கு அயராது உழைத்தவர் இன்று இளைப்பாறும் அதிபர் திரு. வி. சுப்பிரமணியம். இனிமேல் இக்கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள அத்தனைபேரும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி இருக்கிறது இதனைச் சாதுரியமாகச் சமாளிக்க நல்ல திறமைசாலி ஒருவரை இக்கல்லூரிக்கு அதிபராக நியமிப்பதே சிறந்தது' இவ்வாறு ஸ்கந்தவரோதயா அதிபர் திரு. சுப்பிரமணியம் ஓறேட்டர் ஓய்வு பெறுவதை முன்னிட்டு பெற்றோர் ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசுகையில் உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம் பேசுகையில் கூறினார்.

திரு. சி. சுப்பிரமணியம் (ஓறேட்டர்) வ. பொன்னம்பலம், வைத்தியகலாநிதி ஆ. நடராசா, சிவபாதசுந்தரம், திருமதிகள் வரதராஜா, தம்பையா உட்படப் பலரும் பேசினர் பெற்றோர் ஆசிரியசர்பில் வீட்டுத் தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் மூத்தவிநாயகர் சன சமூக நிலையத்தின் 16-வது ஆண்டு நிறைவு விழா இம்மாதம் 5-ம் திகதி நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். ஐ. அசீஸ் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அன்று மாலை விளையாட்டுப் போட்டிகளும், இரவு நடன, நாடக, இன்னிசை, கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (கா. நி.)

## திருட்டு

ஊர்காவற்றுறை, வியா

புங்குடுதீவு கிழக்கு பத்தாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா பெண்முத்துப் பிள்ளை என்பவரின் வீட்டில் இருந்து ரூபா 600 பெறுமதியான சேலைகள், குத்துவிளக்குகள் களவாடப்பட்டதாக புகார்செய்யப்பட்டது. இது சம்பந்தமாக சந்தேகத்தில் இருவரை பொலிசார் கைது செய்து நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிபதி சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

## பொறுப்புணர்ச்சியோடு வாழவேண்டும்

பண்டத்தரிப்பு, வியாழன்

பொறுப்புணர்ச்சியற்றவராக இளைஞர்கள் வாழ்வதினால் சாதிக்கவேண்டிய பல காரியங்களை சாதிக்காது விடுகின்றனர் என இளவாலை சென்ஜேம்ஸ் இளைஞர் மத்தியில் பேசுகையில் வணபிதா. யேசுதாசன் குறிப்பிட்டார்,

ஆண்மை ஆற்றல் எதையும் சாதிக்கும்திறன் இன்றைய இளைஞர்களிடத்தில் இருந்தபோதிலும் அவற்றை அவர்கள் பயன்படுத்துவதில்லை என்று மேலும் கூறிய அவர் பொறுப்புணர்ச்சியற்ற விதத்தில் நடப்பதினால் தான் இளைஞர் சமுதாயம் சீர்குலைந்துபோகிறது எனக் குறிப்பிட்டார்.

## புதிய முறை விவசாய பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

வரிசைக்கிரமமாக நாற்று நடுதல் நேற்றுக் காலை மறவன்புலோவில் செய்து காட்டப்பட்டது யாழ்ப்பாணம் அரசாங்க செயலக விவசாயக் கந்தோரைச் சேர்ந்த திரு. என். மாணிக்கவாசகர். இதனைக் கை இயந்திரம் மூலம் செய்து காண்பித்தார். இப் பகுதியைச் சேர்ந்த பல விவசாயிகளும் மாணவர்களும் இதனைப் பார்வையிட்டனர். சாவகச்சேரி விவசாயப் பகுதி போதனாசிரியரால் இது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. (கா. நி.)

## சுழிபுரம் கி.ச. கிணறு வாங்க முடிவு

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பறாளைவெளியிலிருக்கும்ஒருகிணற்றைபொது மக்களின் தேவைக்கு நல்ல பாதுகாப்புடன் இருக்கச் செய்வதற்காகவும், நல்ல நீரை எல்லோரும் பெற்றுக் கொள்ளவும் கிராமசபையினர் இக்கிணற்றை வாங்க வேண்டும்எனஒருதீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

சபைத்தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## ஆலயவீதி திருத்தம்

அளவெட்டி, வியாழன்

ஏழாலைகோவில் வீதியை அரசாங்கத்தின்சிறு உதவியுடன்சிரமதானம்மூலம்அமைப்பதற்கான ஏற்பாடுகளை ஏழாலை தென்மேற்கு கிராம...

## அகில இலங்கைத் தமிழ் நாடகப் போட்டி

இடம்: எளுதுமட்டுவாள் நடேசர் தமிழ் மன்ற அரங்கு.

காலம்: 2-9-69 தொடக்கம்.

பரிசுகள்: தங்கப்பதக்கம், வெள்ளிவிருது, வெள்ளிக்கிண்ணம் மற்றும் விசேட விருதுகளும் சான்றிதழ்களும்

விண்ணப்ப முடிவு திகதி: 15-8-69.

போட்டிவிதிகளுக்கும் விண்ணப்பப் படிவங்கட்கும் தொடர்பு கொள்க.

நா. சுப்பிரமணியம்,
செயலாளர்,
1682 நடேசர் தமிழ்மன்றம், எளுதுமட்டுவாள்.

## 'ஈழநாடு' பகிடிப்போட்டி—(3)

இப் போட்டியை நாம் தொடங்கும் பொழுது நேயர்கள் பழைய பகிடிகளை பழைய பத்திரிகைகளிலிருந்து இரவல் எடுத்து எழுதவேண்டாம் என்று தயவாகக் கேட்டிருந்தோம் அப்படியினும் முதலாவது போட்டிக்கு எழுதி பரிசுபெற்ற திரு அ. குகதாசன் ஏற்கனவே வேறு சில சஞ்சிகைகளில் வெளிவந்த பகிடியையே எழுதினார் என்று பல நேயர்கள் எமக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். எல்லாப்பத்திரிகைகளையும் சஞ்சிகைகளிரும் வாசிப்பது எம்மால முடியாத காரியம். நேயர்களின் கண்ணியத்தில் நம்பிக்கைவைத்தே இப போட்டியை ஏற்படுத்துகிறோம். ஆகையினால் இனிமேலும் இந்த...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

களும்

விண்ணப்ப முடிவு திகதி: 15-8-69.

போட்டிவிதிகளுக்கும் விண்ணப்பப் படிவங்கட்கும் தொடர்பு கொள்க.

நா. சுப்பிரமணியம்,
செயலாளர்,
1682 நடேசர் தமிழ்மன்றம், எளுதுமட்டுவாள்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

ஜெமினி — சாவித்திரி கிரிஜா நடித்த

இரு சகோதரிகள்

(புதிய கொப்பி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்


ஜெமினி கணேசன் சரோஜாதேவி நடித்த

தாமரை நெஞ்சம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)

2-30, 6-30, 9-30



எம். ஜி. ஆர்.

★

ஜெயலலிதா

மனோகர், அசோகன், விஜயகுமாரி, சோ, மனோரமா, கண்ணன் நடித்த

கணவன்

இசை: எம். எஸ் விஸ்வநாதன் டைரக்ஷன் ப. நீலகண்டன்


நடராசா, கவுரி கணவதியார்.

### நீளம்பாய்தல்

மேற்பிரிவு- புவனேஸ்வரி செல்லத்துரை. கனகமணி மதியாபரணம், தனலட்சுமி கோவிந்தசாமி.

கீழ்ப்பிரிவு- மங்கையரக்கரசி குலதுங்கம், புஸ்பராணி கந்தையா. ருஜீ பரகூடி.

மத்திய பிரிவு- குணேஸ்வரி கோவிந்தசாமி, சரோஜினி தேவராசா, ஜெகதாம்பிகை மயில்வாகனம்.

### ஈட்டி எறிதல்

மேற்பிரிவு- இரத்தினேஸ்வரி சின்னப்பு, கெங்காதேவி வேலுப்பிள்ளை, அரியமலர் கந்தையா.

### 200 மீட்டர் ஓட்டம்

மேற்பிரிவு- கனகமணி மதியாபரணம், புவனேஸ்வரி செல்லத்துரை, தனலட்சுமி கோவிந்தசாமி.

### 150 மீற்றர் ஓட்டம்

மத்திய பிரிவு- அமிர்தராணி நடேசு, குணேஸ்வரி கோவிந்தசாமி, கலைவாணி செல்லத்துரை.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்

சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த

குழந்தைக்காக

வல்வெட்டித்துறை

ரஞ்சனா தியேட்டர்

தினசரி 6-30, 9-30. பிரிபோயா, போயா காலை 10-30

ஜெமினி - சரோஜாதேவி நடித்த

ஆடிப்பெருக்கு

வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி 6-30, இரவு 10-00 பிரிபோயா, போயா 2-30 மணி

எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த

தெய்வத்தாய்

REGAL JAFFNA

Daily 4-45, 7-00 & 9-45 p.m.

Rosalind Russell, Hayley Mills in THE TROUBLE WITH ANGELS

Up to 8-8-69

MANOHARA JAFFNA

Daily 4 Shows

Jane Fonda in BARBARELLA

Panavision/Technicolor)


கிய காலப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாட்டை அனுசரித்தமைக்கு காரணம் எனக் சுகாவார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## வேல்விழா

வெள்ளவத்தை, வியா. கொழும்பில் நடைபெற்றுவரும் வேல்விழா நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைபெற்றன.

தமிழகத்திலிருந்து தருவிக்கப்பட்டுள்ள கலைஞர்களின் சச்சேரிகளும் இடம் பெறுகின்றன. பல உல்லாசப் பிரயாணிகளும் வேல்விழா நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டு வந்தனர்.

## வீதி சீர்கேடு

ஊர்காவற்றுறை, வியாழன் நாரந்தனையையும் சரவணையையும் இணைக்கும் குறுக்கு ஒழுங்கையொன்று போக்கு வரத்துக்கு உதவாத நிலையில் உள்ளதால் இப்பகுதி மக்கள் பெரிதும் கஷ்டமடைய வேண்டிய நிலைமையேற்பட்டுள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 1—8—69

(செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 இஸ்லாமியநிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 மாதர்கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்பாடல், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 சித்திரம், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கோட்டுவாத்தியம், 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-10 சித்திரம், 8-35 பேச்சு, 8-45 இஸ்லாமியகீதம், 9-15 புல்லாங்குழல், 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச் சுருக்கம்.

வது போட்டிக்கு எழுதி பரிசுபெற்ற திரு அ. குகதாசன் ஏற்கனவே வேறு சில சஞ்சிகைகளில் வெளிவந்த பகிடியையே எழுதினார் என்று பல நேயர்கள் எமக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். எல்லாப்பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் வாசிப்பது எம்மால முடியாத காரியம். நேயர்களின் கண்ணியத்தில் நம்பிக்கைவைத்தே இப போட்டியை ஏற்படுத்துகிறோம். ஆகையினால் இனிமேலும் இந்த ஏமாற்று வேலையில் ஈடுபட வேண்டாம் என்று நேயர்களை மன்னிப்பாக கேட்டு கொள்ளுகிறோம்.

### பரிசுப் பகிடி

இரண்டாவது போட்டியில் பரிசுபெறும் பகிடி கீழ் தரப்படுகிறது.

இதை எழுதியவர்; ரஜனி மயில்வாகனம், பொன்னாலை, சுழிபுரம்.

திண்ணையில் உட்கார்ந்து தெருவில் சென்றோரை நோட்டம்விட்டு வந்தார் ஓர் ஒற்றைக்கண்ணர்.

தமக்குப் புதிதாகத் தோன்றிய ஒருவர் நடந்து செல்வதை இவர் கவனித்தார் வெருவில் நடந்தவருக்கு ஒரு கால் சற்று ஊனமானதால் காலைச் சுற்றிவளைந்து ஊன்றிநடந்தார். இவரைநையாண்டி செய்ய எண்ணி திண்ணையிலிருந்த ஒற்றைக் கண் மனிதர் ஓய்சுற்றுக்காலில் நெல் இப்பொழுதுஎன்ன விலைகாணும்? என்று கேட்டார் தெருவில் நடந்தவர் சிறிதும் தயக்கமின்றி ‘பொட்டை மரக்காலால் எட்டு என்று கேள்வி’ என்று திருப்பித் தரவும் திண்ணையில் இருந்தவர் வாயடைத்துப் போனார்.

பொட்டை மரக்கால் என்பது சரியில்லாத ஓர் அளவை.

### பாராட்டுக்குரியவை

செல்வி ப. சதானந்தம், மட்டுவில் நாடு, கிழக்கு, பூநகரி, க. லதாமதி, 39, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். தி. வரதராசா, தபால்நிலையம், பரந்தன். இந்த நேயர்களின் பாராட்டுக்குரிய பகிடிகள் எமது தினப்பதிப்பில் வெளியிடப்படும்.

### அடுத்தபோட்டி

நகைச்சுவையும் இலக்கியச்சுவையும் பொருந்திய ஒரு சிறிய பகிடியை எழுதி அனுப்புங்கள்

### நிபந்தனைகள்

ஒருவர் எத்தனை பகிடிகளையும் எழுதி ஒரே உறையில் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பகிடியுடனும் கீழ்க்காணப்படும் கூப்பன் ஒன்று இணைக்கப்படவேண்டும். அனுப்பவேண்டிய விலாசம்: பகிடிப் போட்டி — (3) ‘ஈழநாடு’, த. பெ. இலக்கம் 49, யாழ்ப்பாணம்.

விடைகளை ‘ஈழநாடு’ காரியாலயத்தில் நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். எல்லா விஷயங்களிலும் போட்டிக்குழுவின் தீர்ப்பே முடிவானது. போட்டி சம்பந்தமான எவ்வித கடிதப்போக்குவரத்தும் வைத்துக்கொள்ளவேண்டாம். ‘ஈழநாடு’ ஊழியர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது. மிகச் சிறந்ததெனக் கருதப்படும் பகிடிக்கு ரூபா இரண்டு (ரூ. 2/-) பரிசுப்பணமாக வழங்கப்படும். போட்டி முடிவு திகதி 5-8-69.

‘ஈழநாடு’

பகிடிப் போட்டி (3)

பெயர் ........................................

விலாசம்: ........................................

........................................

குகள் களவாடப்பட்டதாக புகார்செய்யப்பட்டது. இது சம்பந்தமாக சந்தேகத்தில் இருவரை பொலிசார் கைது செய்து நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். நீதிபதி சந்தேக நபர்களை பிணையில் செல்ல அனுமதித்தார்.

### திருத்தம்

அளவெட்டி, வியாழன் ஏழாலைகோவில் வீதியை அரசாங்கத்தின்சிறு உதவியுடன்சிரமதானம்மூலம்அமைப்பதற்கான ஏற்பாடுகளை ஏழாலை தென்மேற்கு கிராம முன்னேற்றச்சங்கம் மேற்கொண்டுள்ளது.

## இன்றைய பலன்

-சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை-

மேஷம்- அசுரவேகத்தில் செயலாற்றவேண்டும் என்று விரும்புவீர்கள். ஆனால் சம்பவங்கள் ஆமை வேகத்தில் நகரும் சகோதரவழி சஞ்சலம் ஏற்படலாம். உடல்நலன் பாதிக்கப்படும். இனத்தில் பூசலுக்கும் இடமுண்டு.

ரிஷிபம்- கல்வித்துறையில் நல்ல திருப்பம் உருவாகும் அறிஞர்களுடன் தொடர்புகள் ஏற்படும். பூமியால் இலாபத்துக்கு இடமுண்டு. சிலருக்குத் திடீர்வரவுகளும் கிடைக்கும் ஆசிரியப்பணியில் ஈடுபடுபவர்களுக்கு சிறப்பான நாள்.

மிதுனம்- ஒளிமயமான எதிர்காலத்துக்கான அறிகுறிகள் தென்படும். புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். பிள்ளைகளினால் பெருமைக்கு இடமுண்டு. இல்லத்திலும் இனியவை நடக்கும்.

கடகம்- எதிர்பாராதமுனையிலிருந்து ஆபத்து உருவாகும். உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள் தோன்றக் கூடும். இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தெய்வவழிபாடு விரும்பத்தக்கது.

சிம்மம்- கன்னல்போல் இனிக்கும் வாழ்க்கை காதலில் வெற்றியுண்டு. பசுமையான நினைவு ஒன்று தலை தூக்கும். இல்லறத்தில் இணைப்புக்கள் இறுகும். வெளியிடத்தொடர்புகளும் திருப்திகரமாக இருக்கும். இன்று சுபதினம்.

கன்னி- தொழில்துறையில் மோதல்கள் தோன்றக் கூடும் மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காக நேரிடும். சிநேகிதர் ஒருவரே காலை வாரிவிடுவதற்கு முயற்சிசெய்வார். அவதானத்துடன் இருப்பின் அமைதி உண்டு.

துலாம்- பரந்த மனப்பான்மையுடன் செயலாற்றுவீர்கள். பொதுப்பணிகளில் அதிக ஈடுபாடு ஏற்படும். பிதாவழி மூலம் ஆதரவு கிடைக்கும். பொதுமக்கள் மத்தியில் செல்வாக்குப் பெருகும். அரசியல்வாதிகளுக்கு அதிக நன்மையுண்டு.

விருச்சிகம்- செய்தொழிலால் சிறப்பு ஏற்படும். சகதொழிலாளர்களின் ஆதரவு கிடைக்கும் புதிய முயற்சிகளில் ஈடுபட விரும்புவீர்கள் மருத்துவத்துறையில் ஈடுபபவர்கள். புதிய சாதனையை நிலைநாட்டுவார்கள். கண்ணியமான தினம்.

தனுசு- வியாபாரவிருத்திக்கு இடமுண்டு. வெளியிடத் தொடர்புகளில் முன்னேற்றம் தென்படும். புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். நீண்டநாள் கடன் இன்று நிவிர்த்தியாகும். புத்திரவழியாலும் புதினம் கிடைக்கும்.

மகரம்- சிந்தனை அலைகளின் மத்தியில சிரமம்படுவீர்கள். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

கும்பம்- அவசரப்போக்கினால் அதிகாரிகளைப் பகைத்துக்கொள்ளுவீர்கள். எதற்கெடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும். தவறானவழி மூலம் பணம் பாழாகும். முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

மீனம்- எதிர்பார்ப்பதற்கு அதிகமாக வருவாய் கிடைக்கும். குடும்பத்தில் கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. வெளிநாடு செல்வதற்கான சந்தர்ப்பமும் உருவாகலாம். இன்று மனம்போல் வாழ்வு மலர்வதற்கு இடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் எழுத்தாளர் பிரிட்டனில் தஞ்சம்

## திரும்பிப்போக விரும்பவில்லையாம்

லண்டன், ஜூலை 31

லண்டனில் காணுமல் போய்விட்டதாகக் கருதப்பட்ட சோவியத் நூலாசிரியர் அனச்டோன குஸ்னட்சோவ் பிரிட்டனில் தங்கியிருப்பதற்கு அனுமதிகோரியிருக்கிறார்.

சோவியத் யூனியன் செக். கோஸ்லாவாக்கியா மீது ஆக்கிரமிப்பு நடத்தியதின் காரணமாகவேதாம் ரஷ்யாவை விட்டு வெளியேற முடிவு செய்ததாக அவர் பிரிட்டிஷ் பத்திரிகை யொன்றிற்கு அளித்துள்ளபேட்டியில் கூறியிருக்கிறார். தாம் மீண்டும் சோவியத் யூனியனுக்குத் திரும்பப் போவதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளாராம்.

ரஷ்யாவில் எழுத்தாளன் என்ற முறையில் தம்மால் வேலைசெய்ய சாத்தியமில்லையென்று கூறியுள்ள திரு. குஸ்னட்சோவ், கடந்த வியாழக்கிழமை லண்டனுக்கு வந்தார்.

பிரிட்டனில் காலவரையறையின்றி தாங்கியிருப்பதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு அனுமதியளித்திருக்கிறது. இதுபற்றி சோவியத் தூதரகத்துக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது

திரு. குஸ்னட்சேவ் எழுதிய நாவல்கள் சோவியத் அரசியல் தத்துவத்துக்கு முரண்பாடானவை யென்று சோவியத் பத்திரிகைகள் விமர்சித்துள்ளன. சமீபத்தில் அவர் வெளியிட்ட ஒரு நாவலில் சோவியத் தொழிலாளர்களைப் பாதிப்பதாய் இருந்ததாகவும்குற்றஞ்சாட்டப்பட்டது.

40 வயதான குஸ்னட்சோவ் லண்டனில் காணுமல் போய்விட்டதாகவும் அவரைத் தேடிக்கண்டுபிடிக்கும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் முன்னர் செய்திகள் வெளிவந்தன இப்பொழுது அவர் பிரிட்டனிடம் அடைக்கலம் கோரியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

### பாகிஸ்தானுக்கு சோவியத் உதவி மறுப்பு?

கராய்ச்சி, ஜூலை 31

பாகிஸ்தானுக்கு சோவியத் யூனியன் ஆயுத உதவிகளைக் கொடுப்பதை நிறுத்திவிட்டதாக செய்திகள் அடிபடுகின்றன.

பாகிஸ்தான் சீனவுடன் அளவுக்கு மீறி குலாவுவதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது பாகிஸ்தான் விமானப் படை தளபதி நூர்கான் பீகிங் விஜயம் செய்ததைத் தொடர்ந்து இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சோவியத் யூனியனின் இந்தப் போக்கைத் தொடர்ந்து பாகிஸ்தான் சீனவுடன் மேலும் நெருக்கமாக தொடர்புகொள்ளத் தொடங்கிவிட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

......

### வெடிமருந்து வைத்திருந்தாரம் அபராதம் ரூபா 100

அளவெட்டி, வியாழன்

சட்டவிரோதமாக வெடிமருந்து வைத்திருந்தவருக்கு 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

புன்னலைக்கட்டுவன் வாசியான தம்பிபிள்ளை என்பவர் சட்டவிரோதமாகவெடிதயாரிக்கும் மருந்தைவைத்திருந்ததாக சுன்னுகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடர்ந்திருந்த வழக்குஒன்று இன்று நீதிபதி திரு எஸ். ஆனந்தகுமாரசுவாமி முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியை குற்றவாளியாகக் கண்ட நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்துதீர்ப்பளித்தார்.

## நைஜீரிய மக்களுக்கு உதவிகள்; யுதாண்ட் விடுத்துள்ள வேண்டுகோள்

வாஷிங்டன், ஜூலை 31

நைஜீரியாவில் நடைபெறும்உள்நாட்டுப்போரின் காரணமாக துன்பங்களுக்குள்ளாகி தவித்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு வெளியிலிருந்து உதவிகள் கிடைப்பதற்கு அனுமதிக்கும்படி ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் நைஜீரிய தலைவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சமஷ்டி நைஜீரியாவுக்கும் பிரிந்துபோன பியாப்ராவுக்குமிடையில் நடைபெற்றுவரும் யுத்தத்தினுல் லட்சக்கணக்கான பியாப்ரா மக்கள் உணவுக்கும், உடைக்கும் வழியின்றி நலிகிறார்கள். இந்த மக்களுக்குஉலக செஞ்சிலுவைச்சங்கம் உதவி வந்தது. செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவிகளுக்கு அடிக்கடி இடையூறுகள் இருந்துவந்துள்ளது. அண்மையில் செஞ்சிலுவைச் சங்கத்தின் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து அல்லல்படும் மக்களுக்கு உதவிகள் கிடைப்பதில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனுல் மேலும் பல லட்சககணக்கான மக்கள் துன்பங்களுக்குள்ளாகியிருக்கிறார்கள். இதன்காரணமாகவே இந்த மக்களுக்குத் தடையின்றி உதவிகள் போய்க் கிடைப்பதற்கு உதவும்படி நைஜீரியத் தலைவர்களை யுதாண்ட் கேட்டுக கொண்டிருக்கிறார்.

### பாப்பாண்டவர் விஜயம்

யுகாண்டாவுக்கு இன்று விஜயம்மேற்கொள்ளும்பாப்பாண்டவர் அங்கு ஆபிரிக்கத் தலைவர்களின் உச்சி மகாநாடொன்றை நடத்துவார் என்று கருதப்படுகின்றது. பாப்பாண்டவர் நைஜீரிய தலைவர்களையும், பியாப்ரா தலைவர்களையும் சந்திப்பார். இருதரப்பினர்க்குமிடையில் சமரசம் ஏற்படுத்திவைக்கவும் அவர் முயற்சி மேற்கொள்வார்.

பாப்பாண்டவர் வருகையை யொட்டி மூன்று தினங்களுக்கு போர்நிறுத்தம் செய்யவேண்டும் என்று பியாப்ரா தலைவர் சேணல் ஒஜுக்கு யோசனை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்.

## பாங்கு தேச உடைமை மசோதாவிற்கு லோகசபை அங்கீகாரம்

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவிலுள்ள 14 பெரிய பாங்குகளை தேச உடைமையாக்குவதற்கான

### இந்திராவை நீக்க வேண்டும்

திருமதி இந்திரா காந்தி

ஒரேநேரத்தில் செய்யும் இப்போக்கு செல்வ உற்பத்தியை தடை செய்வதாகும் என்ற ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார். நாம்தக்க

# 'கல்வித்துறையில் மாற்றம் தேவை'

### யூனியன்கல்லூரி அதிபர் கூறுகிறார்

அளவெட்டி, வியா.

''இன்றைய நிலையில் நூற்றுக்கு தொண்ணூறு வீதமான மாணவர்கள் ஜி. சி. ஈ. படிப்புடன் கல்லூரிப் படிப்பை முடித்து உத்தியோகம் தேடித் திரிகிறார்கள். இந்த நிலைமாறி வருங்காலத்தில் நல்ல சமுதாயம் உருவாக வேண்டுமாயின் கல்வியில் மாற்றம் ஏற்படுத்தப் படவேண்டும்.''

இவ்வாறு யூனியன்கல்லூரி அதிபர் திரு. கே. கிருஷ்ணபிள்ளை வருடாந்த பரிசளிப்பு விழாவையொட்டி விடுத்துள்ள ஆண்டறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாது:-

**ஆங்கிலம் திறவுகோல்**

பரந்த அறிவை வளர்த்துக் கொள்வதற்கு ஆங்கில அறிவு மிகவும் முக்கியமானது உயர்தரக் கல்வியறிவிற்கு ஆங்கிலம் திறவுகோலாக அமைந்துள்ளதென்றல அது மிகையாகாது. ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை அறிந்துள்ள கலவிப் பகுதியார் ஆங்கில போதனைக்குச் சகல வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். இந்த வாய்ப்பை மாணவர்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும், அத்துடன் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆங்கில அறிவைப் பெறும் வண்ணம் தூண்டிவிடுதல முக்கியமானது.

தாய்மொழியிலே மாணவர்களுக்குப் போதனை நடக்கின்றது. தமிழிலே கற்று அவர்கள் மொழிப்பற்று உடையவர்களாக வாழவேண்டும் எமது மாணவர்கள் ஓய்வு நேரத்தில செந்தமிழ் இலக்கிய நூலகளிலும் இக்கால எழுத்தாளரின் சீரிய படைப்புக்களிலும் ஆதிக்கம் பெறுதல நன்று மாணவர்களின் மனதைக் கெடுக்கக் கூடிய தரம் குறைந்த புத்தகங்கள் பல இக்காலத்தில மலிந்துள்ளன, எனவே பெற்றோர் வாணவர்கள் எதனை வாசிக்கின்றார்கள் என்பதில, கண்ணுங்கருத்துமாக இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன். சிறந்த நூலகள் மாணவரின் உள்ளத்தைப் தூய்மையாககி அவர்களைச் சான்றோராககு மென்ற உண்மையை நான் இங்கு எடுத்துக கூற விடும்புகின்றேன்'

கடந்த ஆண்டிலே சைவ சமய நிகழ்ச்சிகளில் மேற்படி கலலூரி மாணவர்கள் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள் என்றும் குறிப்பாகச் சேக்கிழார் மன்றம் நடாத்திய பெரிய புராணப் போட்டியில தங்கப்பதக்கம் கிடைத்தது என்றும் கிறிஸ்தவ மாணவர்களது சமய நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் சிறந்த முறையில நடைபெற்றுவருகின்றன என்றும் அவர்களுடைய வணக்கம் கிரமமாகத் தேவாலயத்தில நடைபெறுகின்றது எனகுறிப்பிட்டுள்ளார்.

## காந்தி நிலைய நிவாரண உதவி

யாழ்ப்பாணம் வெள்ளி

உருத்திரபுரத்தில் ஏற்பட்டிருக்கும் வரட்சி காரணமாக காந்தி நிலையத்தில் கிணறு வெட்டுவதற்கு இது வரை பின்வருவோர் நிதி வழங்கியுள்ளனர்:

கொழும்புஇராமகிருஷ்ண மிஷன் 500 ரூபா, யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கய் 50 ரூபா பம்பலப்பிட்டி மு. அம்பலவாணர் 15ரூபா, கொழும்பு சினிமாஸ் லிமிட்டெட் 10 ரூபா சுவாமி சைதன்யானந்தா ஞாபகமாக25 ரூபா. மீசாலை எம். ரி. சுப்பிரமணியம் 25 மாதகல் வி, வைத்திலிங்கம் 20 ரூபா, கொக்குவில் காந்தி நிலைய அன்பர் ஒருவர் 5 ரூபா.

கிளிநொச்சியைச் சேர்ந்த வர்த்தகரான திரு. வி. ஆர், தம்பிப்பிள்ளை கிணறு வெட்டுவைபவத்தை நேற்று முன்தினம்ஆரம்பித்துவைத்தார்.

## "கர்நாடக சங்கீதத்தை வளர்ப்பது எமது கடமை"

உரும்பராய், வியா. சங்கீதகலாநிதி சித்தூர்

## தமிழ்விழாவும் மாணவர்களும்

## கடற்படையினரின் தொல்லை தாங்கமுடியவில்லையாம்

### எம்.பி.யும் பொதுமக்களும் புகார்

திருக்கோணமலை, வியா.

பாலம்போட்டாறு, முள்ளிப்பொத்தானை ஆகிய குடியேற்றத்திடல் வாசிகள் திருக்கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சோமபாலா குணதீராவுக்குச் செய்த புகார் ஒன்றில் கல்மிட்டியான் குளப் பகுதியில் உள்ள கடற்படை வீரர்களினுல் நமக்குத் தொல்லைகள் தாங்கமுடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலைமை பலகாலமாக நீடித்துவருவதாகவும், இவர்கள் விறகுவெட்டுவதற்காக காட்டுக்குள் செல்லுகின்றபோதெல்லாம் இந்தக் கடற்படை வீரர்களால் தாக்கப்படுவதாகவும், அவர்கள் தெரிவித்துள்ளனர். மூதூர் இரண்டாவது அங்கத்தவரான திரு. ஏ. எல். ஏ. மஜீத்தும் மாவட்ட அரசாங்க அதிபரிடம் சென்று இதுபற்றி முறையிட்டுள்ளார்.

குடியேற்றவாசிகள் இரக்கமற்ற கடற்படை வீரர்களினுல் அடித்துத் துன்புறுத்தப்படுவதுடன் அவர்களின் முகாமுக்குக்கொண்டு செல்லப்பட்டு உண்ண உணவு, குடிக்க நீர் எதுவும் கொடுக்காமல் வாட்டி வதைக்கப் படுவதாகவும், இதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் திரு. மஜீத் கடற்படைத் தளபதி திரு. ராஜன் கதிர்காமரைக் கேட்டுள்ளார். இதுபற்றிப் பிரதமருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் மகாநாடு ஆகஸ்டில் நடக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

தமிழ் காங்கிரஸ் கட்சியின் 24-வது வருடாந்த மகாநாடுஆகஸ்ட் மாத இறுதியில் நடைபெறுமென்று தமிழ் காங்கிரஸ் நிர்வாக காரியதரிசி திரு. ரீ. சங்கரப்பிள்ளை நேற்று தெரிவித்தார்.

அடுத்த வருடம் முற்பகுதியில் தமிழ் காங்கிரஸின் வெள்ளி விழா கொண்டாடப்படுமென்றும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் கூறினுர்.

ஆகஸ்ட் 11-ம் திகதி யாழ்ப்பாணத்தில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் கமிட்டி கூட்டத்தில் மகாநாட்டிற்கான திகதியும், இடமும் தீர்மானிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

மகாநாட்டிற்கு முன்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒவ்வொரு தொகுதியிலும் தமிழ் காங்கிரஸ் சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர் பட்டியல வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

### கோழி வளர்ப்பில் இளைஞர் ஆர்வம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கோழிப்பண்ணை வளர்ப்பை கிராமம் தோறும் விஸ்தரிப்பதில் காரைநகர் இளைஞர் விவசாயக்கழகத்தினர் ஈடுபட்டுள்ளனர். முதலாவது திட்டத்தில் இங்கு 25 பேர் கோழி வளர்ப்பில் ஆர்வம் செலுத்தத் தொடங்கியுள்ளனராம். (கா. நி.)

### திருப்பணிக்கு நாடகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் சிவன் கோவில் திருப்பணி நிதிக்காக 'மணிஓசை' என்ற நாடகம் நாளை இரவு காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

### பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர் கடமை

புத்தூர், வியா.

'பாடசாலையுடன் நெருங்கிய தொடர்புடைய அரசாங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் ஒன்றுகூடி அளவளாவி ஆவன செய்வதற்கு பாடசாலைகளில் விழாக்

## தீவுப்பகுதி செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோகசபை அங்கீகாரம்

புதுடில்லி, ஜூலை 31

இந்தியாவிலுள்ள 14 பெரிய பாங்குகளை தேச உடமையாக்குவதற்கான மசோதாவை இந்திய லோகசபை ஏற்றுக் கொண்டு விட்டது. மசோதாவை பரிசீலனைக் கமிட்டிக்கு விடவேண்டும் என்று ஜனசங் கட்சி கொண்டு வந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது.

இந்த மசோதாவின் மீதான விவாதத்தின் போதும் வாக்கெடுப்பின் போதும் திரு. மொரார்ஜி தேசாய் சபையில் அமர்ந்திருந்தார்.

விவாதத்தின் போது பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி பேசும்போது, பாங்கு பங்குதாரர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் நஷ்டஈட்டுத்தொகை நியாயமானதுதான் என்று குறிப்பிட்டார்.

வெளிநாட்டு பாங்குகளையும் சிறிய இந்திய பாங்குகளையும் தேச உடமையாக்காததும் சரிதான் என்று பிரதமர் இந்திரா குறிப்பிட்டார். வெளிநாட்டு பாங்குகள் சர்வதேச வர்த்தகத்தில் ஒரு விசேஷமான சேவையை அளிக்கின்றன என்பதாலும், சிறிய இந்திய பாங்குகள் சிறியவையாக விருப்பதாலும் தேச உடமையாக்கப்படவில்லையென்று பிரதமர் குறிப்பிட்டார்.

## காங்கிரஸ் உறுப்பினர் மோதல்

பாங்குகள் தேச உடமை மசோதா லோகசபையில் விவாதிக்கப்பட்ட போது காங்கிரஸ் அங்கத்தவர்களுக்கிடையிலேயே மோதல் ஏற்பட்டது.

திருமதி தாரகேசரி சின்கா சாரதா முகர்ஜா கிசேதா கிருபளானி ஆகியவர்களின் கோஷ்டியினரும், சனிபூசன் உட்பட மற்றக் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர்.

தாங்கள் கொள்கையளவில் மசோதாவின் நோக்கத்தையும் லட்சியங்களையும் ஒப்புக் கொண்டாலும் இது பாரபட்சத்தன்மை வாய்ந்த மசோதா என்று திருமதி சாரதா முகர்ஜி கூறினார். மேலும் இம் சோதாவை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்யக்கூடும் என்று அவர் சொன்னார். அவர் முடிப்பதற்குள் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலரும் எதிர்க் கட்சியினரும் இல்லை, இல்லையென்று கூச்சல் போட்டனர். பெரும் பாடுபட்டு அமைதி ஏற்படுத்தப் பட்டது.

## இந்திராவை நீக்க வேண்டும்

திருமதி இந்திரா காந்தியைப் பிரதம மந்திரி பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்று திரு. ராஜகோபாலாச்சாரியார் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

திருமதி காந்தியின் நடவடிக்கைகளை ராஜாஜி தேசியப்பறவையான மயிலுக்கு ஒப்பிட்டிருக்கிறார். மயிலின் தோகை அழகானது. ஆனால் அதை வைத்துக் கொண்டு பறப்பது அதற்கு முடியாத காரியம். ஏனெனில் அவ்வளவு கனமானது. அதுபோலவே இந்திராவின் சோஷலிசம் உள்ளது. எல்லாவற்றையும் ஒரேநேரத்தில் செய்யும் இப்போக்கு செல்வ உற்பத்தியை தடை செய்வதாகும் என்ற ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார். நாம்தக்க நடவடிக்கை எடுத்து திருமதி காந்தியை வெளியேற்ற வேண்டும், அப்பதவிக்குத்தாம் தகுதியில்லையென்பதை திட்டவட்டமாக அவர் நிருபித்து விட்டார். அப்படி செய்யாவிடில் சோவியத் நாட்டைச் சுற்றும் நாடாக நமது நாடு மாறிவிடும் இறுதியில் அது சீனாவின் சிலந்தி வலைக்குள் நம்மைச் சிக்க வைத்து விடும் என்று அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# எட்வார்ட்கென்னடி பதவி துறக்கமாட்டார்

வாஷிங்டன், ஜூலை 31

செனட்டர் எட்வார்ட் கென்னடி தொடர்ந்துபதவியிலிருப்பதென்று முடிவு செய்திருக்கிறார்.

அண்மையில் ஏற்பட்ட ஒரு கார் விபத்தில் பெண் பிரயாணி ஒருவர் மரணமானதைத் தொடர்ந்து அவர் செனட்டர் பதவியை விட்டு விலகிவிடுவதாவென்று ஆலோசித்து வந்தார். இதுசம்பந்தமாக தமது தொகுதியான மச்சுசெட்ஸ் மக்களின் கருத்தை அவர் கேட்டிருந்தார்.

மச்சுசெட்ஸ் மக்கள் தம்மில் பூரண நப்பிக்கை வைத்திருப்பதாகவும் அதனால் தாம் தொடர்ந்து அரசியலில் தொண்டாற்றப்போவதாகவும் அவர் நேற்று ஓர் அறிக்கையில் கூறினார்.

அடுத்த வருடம் அவர் மீண்டும் செனட்டர் பதவிக்குப் போட்டியிடுவார். ஆனால் அடுத்த முறை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட அவர் தமது கட்சியின் ஆதரவைக் கேட்பாராவென்பது தெரியவில்லை.

## புத்தக நன்கொடை

ஊர்காவற்றுறை, வியாழன்

காரைநகரில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை — நோர்வே அபிவிருத்தித்திட்டமீன்தொழிற்சாலை ஸ்தாபனத்தார்வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு கப்பல் கட்டுதல், மீன்பிடித்தல் ஆகியவைகளை விளக்கும் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

## திட்டமிட்டுத் திருட்டு

### ஒரு கோஷ்டி கைது

சங்கானை, வியா.

கடந்த சில நாட்களாக சங்கானை, சண்டிலிப்பாய், பிராம்பத்தை ஆகிய இடங்களில் கடைகள், ப. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் ஆகியவற்றை உடைத்துக் களவாடியதாக சந்தேகிககப்பட்டு பொலிசாரால் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் கொண்ட கோஷ்டியொன்றைச் சங்கானைப் பொலிசார் கைதுசெயதுள்ளனர். இக்கோஷ்டியில் சங்கானை, சண்டிலிப்பாய் போன்ற இடங்களிலுள்ளவர்களுடன் தென் இலங்கையை சேர்ந்த நபர் ஒருவரும் அகப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொலிஸ் சார்ஜன்ட் திரு. லந்திரா நடத்திய விசாரணையில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த செல்லத்துரை சிவஞானம் என்பவரே இக்கோஷ்டிக்குத் தலைமை தாங்கியவர் எனவும் நடைபெற்ற களவுகள் யாவும் நன்கு திட்டமிட்டே நடாத்தப்பட்டதெனவும் தெரிய வந்துள்ளது.

சிவஞானம் உட்பட நாகமணி நாகராசா, டக்ளஸ் பெரேரா ஆகிய மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். டக்ளஸ் பெரேரா நீதிபதி முன்னிலையில் குற்றத்தை ஒப்புக் கொள்ள வஆகஸ்ட் மாதம் 1ம் திகதி தீர்ப்பு வழங்குவதெனவும் ஏனைய இருவரும் ஆகஸ்ட் மாதம் 6ம் திகதிவரை றிமாண்டில் இருக்கவும் நீதிபதி உத்தர விட்டார்.

...ளப்பட்டபோது எதிரியை குற்றவாளியாகக் கண்ட நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்துதீர்ப்பளித்தார்.

## தமிழ்விழாவும் மாணவர்களும்

உரும்பராய், வியா.

''நமது நாட்டின் கடந்த கால கல்விநிலையைப்பற்றி நாம் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். அதையொட்டி கடந்த நூறு ஆண்டுகளில் நமது நாட்டின் வளர்ச்சி பெற்ற கல்வி நிலையைய நினைவுகூருமுகமாக நாடெங்கும் கல்வி நூற்றாண்டு விழாவைக் கொண்டாட அரசாங்கம் தீர்மானித்தது நூற்றாண்டுவிழாவையொட்டி நடைபெறும் தமிழ்த்தின விழாவின் மூலம் மாணவர்கள் தமது உற்சாகத்தைக் காட்ட நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளமை வரவேற்கக்கூடியதே''.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற தமிழ்த்தினவிழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய வித்தியாலய அதிபர் திரு. சு. குமாரசேகரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## 22 வாக்குகளால் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

சாவகச்சேரி கிராம சபையின் 6-ம் வட்டார அங்கத்தவராக கே. ஆறுமுகம் என்பவர் 22 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கு 271 வாக்குகளும், ஏ. மகேச்சுரனுக்கு 249 வாக்குகளும் கிடைத்தன. எஸ். சிதம்பரப்பிள்ளை என்பவர் ஒரு வாக்கு மட்டும் பெற்றதால் கட்டுப் பணம் இழந்தார். (கா. நி.)

......

## இப்படி ஒரு தந்திரம்

கேகாலை, வியாழன்

இறைச்சிக்காக மிருகங்களைக் கடத்துபவர்கள்பொலிசாரிடமிருந்து தப்புவதற்காக ஒரு புதிய தந்திரத்தைக் கையாளுகிறார்கள். விலை மதிப்புள்ள 'பென்ஸ்' போன்ற பெரிய கார்களில் எருமைஇறைச்சியைக் கடத்திச் செல்கிறார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

15ரூபா, கொழும்பு சினி மாஸ் லிமிட்டெட் 10 ரூபா தார்.

# "கர்நாடக சங்கீதத்தை வளர்ப்பது எமது கடமை"

உரும்பராய், வியா.

''நமது இசைக்கலை மிகவும் புராதனமானது. உயிர்க்கலையான கர்நாடக சங்கீதக் கலையை வளர்ப்பது எங்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும். யாழ்ப்பாணம் ஒரு வனாந்தரம் என்ற தவறான கருத்துச் சிலரிடையே உண்டு. அது தவறானது. சங்கீதம் ஊற்றெடுத்துப்பாயும் வளம் பொருந்திய நாடு என்று மற்றவர்களும் கருதக்கூடிய வகையில் நம்நாடு மிளிர வேண்டுமானால் ஒவ்வொரு இல்லத்திலிருந்தும் ஒவ்வொரு இசையரசிகள் தோன்ற வழிசெய்யவேண்டும். விஞ்ஞான புதுமைகள் கண்டுள்ள அமெரிக்கதேசம் இராமநாதன் அக்கடமி அதிபர் திரு. எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதரை அங்கு அழைத்துள்ளது. செல்வி ஞானகுமாரி தங்கராசா போன்ற இசையரசிகளின் இனிய கீதத்தைக் கேட்டுமகிழ அமெரிக்க தேசம் எம் நாட்டைநோக்கி விரைவில் வந்துசேரும் என்பது திண்ணம். அந்த நாள் வெகு தொலைவில் இல்லை.''

இசையரங்கேற்றம் ஒன்றுக்குத் தலைமைவகித்துப் பேசிய இராமநாதன் அக்கடமித் தலைவர் திரு எஸ். ஆர். கனகநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

கடந்த மாதம் இராமநாதன் இசைக்கழகத்தில் நடைபெற்ற சங்கீதரத்தினம் பரீட்சையில் முதலாம் வகுப்பில் விசேடசித்திபெற்ற செல்வி ஞானகுமாரி தங்கராசாவின் இசையரங்கேற்றம் சென்ற திங்கள் மாலை உடுவில்கிராமசபைத் திறந்தவெளியரங்கில் நடைபெற்றது

நவாலி மகாவித்தியாலய அதிபர் திருமதி ஏ. டபிள்யூ. தங்கராசா பேசுகையில் சங்கீதயேதை டி. கே. ரங்காச்சாரி செல்வி ஞானகுமாரியை ஈழத்துப்பட்டம்மாள்' என்று குறிப்பிட்டது மிகவும் பொருத்தமானது என்றார்.

மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. தெ து. ஜெயரத்தினம்பேசுகையில், ''1960ல் தொடங்கிய இசைக்கழகம் வளர்ந்துவருவதற்கு இராமநாதவள்ளலின் மானசீகமான ஆசியே காரணமாகும் என்றும் டி. கே. ரங்காச்சாரி, சந்தியாவந்தனம், ஸ்ரீநிவாசராவ், எம். ஏ. கல்யாணகிருஷ்ணபாகவதர், சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை போன்ற பிரபல வித்துவான்கள் ஆகிரியர்களாகவும், பரீக்ஷகர்களாகவும் இராமநாதன் இசைக்கழகத்தில் தொண்டுபுரிந்தமை மகிழ்ச்சிக்குரியது என்றும்'' கூறினார்.

இராமநாதன் இசைக்கழகத்தாரின் தங்கப் பரிசிலைப்பெற்ற செல்வி ஞானகுமாரியைப் பலரும் பாராட்டினர். திருவாளர்கள் ச. அம்பிகைபாகன், ரி. தங்கராசா ஆகியோர் நன்றியுரை கூறினர்.

## பெண் பிரயாணிகளுக்கு கல்வீச்சு

அளவெட்டி, வியா.

காங்கேசன் துறையிலிருந்து புறப்பட்டுச்செல்லும் ரயில் வண்டியில் பொருத்தப்பட்டிருக்கும் பெண்களுக்கான பிரத்தியேகப் பெட்டியில் பிரயாணம்செய்யும் பெண் பிரயாணிகள் கல்வீச்சுக்கு இலக்காகுவதாகப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இவ்விதம் கல் வீச்சுக்கு இலக்கான இரு பெண்கள் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம் பகுதி மக்கள் ரயில்வே அதிகாரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

......

## அமைச்சரை சந்திப்பர்

சுழிபுரம், வெள்ளி

இலங்கை தேசிய சுகாதார சேவையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் டிஸ்பென்சர்கள் சங்கமும் மருத்துவமாதர் சங்கமும் தமக்கு விதிக்கப்பட்டுள்ள சிங்கள தேர்ச்சி நிபந்தனை சம்பந்தமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவிருக்கும் சுகாதார அமைச்சரைப் பேட்டி காணவிருக்கிறது.

இம்மாதம் 4ம் திகதி காலை சீமெந்து தொழிற்சாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இச்சந்திப்பின்போது திரு. ஜி. ஜி பொன்னம்பலம், திரு. மு சிவசிதம்பரம் ஆகியோரும் பிரசன்னமாயிருப்பார்கள்.

புத்தூர், வியா.

'பாடசாலையுடன் நெருங்கிய தொடர்புடைய அரசாங்கம், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் ஆகியோர் ஒன்றுகூடி அளவளாவி ஆவன செய்வதற்கு பாடசாலைகளில் விழாக்கள் எடுப்பது அவசியம். பாடசாலையின் சகல வளர்ச்சிகளுக்கும் நாம் அரசாங்கத்தை எதிர் பார்ப்பது நியாமில்லை. நாட்டின் சகல பாடசாலைகளிலும் அரசாங்கம் தனிப்பட்ட முறையில் கண்ணோட்டம் செலுத்த முடியாது. பெற்றோராகிய நாமே பாடசாலையின் முன்னேற்றத்தில் தேவைகளில் கவனம் செலுத்தவேண்டும்''

'யாழ்ப்பாணம் நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் நடைபெற்ற கல்வி நூற்றாண்டு விழாவை ஆரம்பித்துப் பேசுகையில் திரு. சரவணமுத்து பேசினார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. குணரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இவ்விழாவில் தலைமையாசிரியர் உட்பட இன்னும் பலர் பேசினர். கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ——

## விஞ்ஞான ஆய்வு கூடம் அமைக்கப்படும்

அராலி, புதன்

சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடமொன்று அமைக்கப்படவிருக்கிறது. சிரமதான மூலம் அமைக்கப்படவிருக்கும் இக் கூடத்திற்கான அத்திவாரக்கல் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினத்தினால் நாட்டப்பட்டது. சிரமதான வேலைகளுக்குப் பொறுப்பதிகாரியான ஆர். டி. ஓ. திரு. கே. என். நவரத்தினமும் சமுகமாயிருந்தார். வித்தியாலய ஆசிரியர்கள் கிராமவாசிகள், பெற்றோர் ஆசிரிய சங்க உறுப்பினர், பழைய மாணவசங்க அங்கத்தவர் எனபலர் இவ் வைபவத்தில் பங்கு கொண்டிருந்தனர்.

## பதவி உயர்வு

பருத்தித்துறை, வியாழன்

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய சித்திர, கைப்பணி ஆசிரியர் திரு. கே. கனகசபை வடமாகாண சித்திர, கைப்பணிக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். சுமார் இருபது ஆண்டுகள் திரு. கனகசபை ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

# தீவுப்பகுதி செய்திகள்

அல்லைப்பிட்டி, வியா.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டு கோஷ்டியினருக்கும், யாழ்ப்பாணம் ஜோன்சன் கல்லூரி விளையாட்டுக் கோஷ்டியினருக்குமிடையே ஹொக்கிபோட்டியொன்று நடைபெற்றது. இப்போட்டியில் புனித அந்தோனியார் கல்லூரியை ஜோன்சன் கல்லூரி 2 — 1 கோல்களால் தோற்கடித்தது.

★

## 'சேரன்' சாம்பியன்

காரைநகர் 'யாழ்ரன்' கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் மேற்படி கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெற்றபோது 'சேரன்' இல்லம் முதலாவது இடத்தைப் பெற்று சாம்பியன் ஆனது, 'சோழன்', பாண்டியன்' ஆகிய இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களைப் பெற்றன.

★

## நிர்வாகிகள்

வேலணை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினரின் மூன்றுவது வருடாந்தக்கூட்டம் வேலணையில் நடைபெற்றபோதுபின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். காப்பாளர்; டாகடர் கே. வீ கே. ஜெயச்சந்திரா, தலைவர்; கே. வீ. கே. திரு லோகமூர்த்தி, செயலாளர்: கே. பாலசுந்தரம், உபசெயலாளர்: எம். ஜீவா, பொருளாளர்: எஸ் கே. அம்பிகைபாகன், அறுவர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது,

★

## தீர்மானம்

வேலணை பகுதி மக்களின் நீண்டநாள் ஆவலைப் பூர்த்திசெய்யுமுகமாக வேலணை கிராமசபை எல்லைக்குட்பட்ட பகுதிக்குள் ஒரு பொதுவிளையாட்டு மைதானமொன்று நிறுவும்படி வேலணை கிராமசபையினரைக் கோரும் தீர்மானமொன்றை வேலணை ஐக்கிய விளையாட்டுக கழகத்தின் மூன்றுவது ஆண்டுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

காரணங்களை ஆராய்ந்து பார்த்து சிந்தனை செய்த பின்னர் பெருந்தன்மையும் நிதானமும் பெறவேண்டும். —மகாத்மா காந்தி

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆடி மாதம் 17-ந்திகதி (1 - 8 - 69)

## ரூ. 115 கோடி துண்டு

நிதி அமைச்சர் வன்னி நாயக்கா தயாரித்துள்ள அடுத்த வருடத்துக்கான வரவு-செலவுத்திட்டத்தைப் பார்த்ததும் இலங்கையின் நிதி நிலைமையைப் பற்றியாருக்கும் கவலை ஏற்படுவதாக இருக்கும். இதன்படி எதிர்பார்க்கும் வரவு சுமார் 253 கோடி ரூபாய். செலவு 367 கோடி. வரவைவிட அதிகச் செலவு 115 கோடி ரூபாவாகும். இதுவரை என்று மில்லாதபடி, துண்டு விழும் தொகை பெரிதும் அதிகரித்துள்ளது.

ஆனால் இதில் வழமையான நிர்வாகச் செலவு மட்டும் 256 கோடிதான் ஆனால் புதிய மூலதனச் செலவுக்கான 102 கோடி ரூபாயும், சேர்க்கப்பட்டுள்ளதால்தான் எதிர்பார்க்கும் மொத்தச் செலவும் துண்டு விழும் தொகையும் அவ்வளவு அதிகமாகவுள்ளது. இதைக் கவனிக்கையில் இலங்கையின் நிதி நிலைமையைப் பற்றி அதிகம் அஞ்சுவதற்கில்லை. அடுத்த வருடம் பொதுத் தேர்தல் வருகிறது. இதற்கு விசேஷ தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே அபிவிருத்திக்காக அதிகம் செலவிட எந்த அரசாங்கமும் முன்வருவதில் வியப்பில்லை.

அண்மையிலுள்ள இந்தியா, பாகிஸ்தான் முதலிய நாடுகளின் வரவு-செலவுத் திட்டத்துடன் இலங்கையின் திட்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில், நாம் பெரிதும் ஆறுதல் கொள்ளக்கூடிய விஷயம் பாதுகாப்புச் செலவுதான். இராணுவத்துக்காக நமது அண்டை நாடுகளில், மொத்தச் செலவில் பாதிக்கு மேல் ஒதுக்கவேண்டியிருக்கையில் இலங்கை சுமார் நூற்றுக்கு ஐந்துக்கும் குறைந்த விகிதமே செலவிடுகிறது. நாம் எந்த வல்லரசு கோஷ்டியுடனும் கூட்டுச்சேராமல், எல்லா நாடுகளுடனும்நட்புக்கொண்டிருக்கும் மேலான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாலும், நமது எல்லைப் பிரச்னைகள் இல்லாமையாலும் இது சாத்தியமானது. இந்த மேலான கொள்கையை எக் காரணம்...

யான மான்யம் ஒதுக்கப் பெற்றுள்ளது. இலங்கையிலுள்ள எல்லா மக்களுக்கும் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்காக 10 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பினும், இந்தக் காரியத்துக்கு இத்தொகை ஓரளவும் போதாது. கள்ளக் குடியேற்ற வாசிகளைக் கண்டு பிடிப்பதற்காக அடையாள அட்டைகளை எல்லாருக்கும் வழங்குவதென்று ஏற்கெனவே பார்லிமெண்ட் சபை தீர்மானித்துள்ளதாலும் பொதுத் தேர்தல் வருவதாலும் இவ்விஷயமாக அரசாங்கம் ஏதும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கலாம்.

வடமாகாண வாசிகளுக்கு வருடா வருடம் வரவு-செலவுத் திட்டத்தில் கண்துடைப்புக்காக இராமநாதன் பல்கலைக் கழகம், காங்கேசன்துறை துறைமுகம் இவற்றுக்கு அடையாளமான்யம் ஒதுக்குவதுண்டு. ஆனால் காரியத்தில் ஒன்றும் நடைபெறுவதில்லை. இம்முறையும் இராமநாதன் பல்கலைக் கழகத்துக்கு 10 ரூபாய் அடையாளமான்யமும், காங்கேசன்துறை துறைமுகத்துக்கு 30 லட்ச ரூபாயும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. இதுவெறும் கண்துடைப்பாக இல்லாமல் செயல் முறையில் கொண்டுவருவார்களா என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

வரவு செலவுத் திட்டத்திலே துண்டுவிழும் சுமார் 115 கோடி ரூபாயை அதாவது நடப்பு வருடத்தைவிட 10 கோடி அதிகம் - நிதி அமைச்சர் எப்படிச் சரிக்கட்ட உத்தேசித்திருக்கிறார் என்ற விபரங்கள் நாளை வெளியாகிவிடும். 'பீக்ஸ்' எனும் வெளிநாட்டுச் செலாவணிச் சான்றிதழ் மூலம் கூடுதலான வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்ப்பதுடன் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளைக்கொண்டும் இந்த அதிகச் செலவை நிதிஅமைச்சர் ஓரளவு சமாளிக்கலாம். இதேசமயம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் ஏற்படும் 13 கோடி ரூபாய் அதிகச்செலவு இந்தத்...

# தமிழ் மொழியிலும் 'டெலிபிரிண்டர்' சாதனம்

**ஆங்கில மொழியைப் போலவே உலகின் பல்வேறு மொழிகளிலும் செய்திப் பரிவர்த்தனைகளுக்காக டெலிபிரின்டர் சாதனங்கள் பெரிதும் உதவிவருகின்றன. ஆனால் தமிழ் மொழியில் தமிழ்நாட்டிலும், மலேஷியா சிங்கப்பூர், இலங்கை போன்ற பலநாடுகளில் தமிழ்ப்பத்திரிகைகள் ஏராளமாக வெளிவந்தபோதிலும் செய்திகளை தமிழ் மொழியிலேயே பரிவர்த்தனை செய்துகொள்வதற்கான டெலிபிரின்டர் சாதனங்கள் இல்லை. டெலிபிரின்டர் தேவைக்கு ஏற்ப இப்பொழுது தமிழ் எழுத்துக்களின் வடிவமைப்பை மாற்றுவதுபற்றி ஆராயப்படுகின்றதாம். இது முடிந்தால் தமிழ்மொழியிலும் டெலிபிரின்டர் சாதனங்கள் உற்பத்தியாகலாம்**

துரிதமான செய்திப் போக்குவரத்திற்கு பயன்படும் டெலிபிரீன்டர்களைத் தயாரிப்பதில் இந்தியாவேகமாக முன்னேறியுள்ளது. இவைகளைத் தயாரிக்கும் ஆசியாவின் ஒரே தொழிற்சாலை சென்னை கிண்டியில் அமைந்திருக்கிறது.

மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்தியாவில் உள்ள மற்ற எல்லா பொதுத்துறை நிறுவனங்களை விட இதுஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை' தான் மிக அதிக லாப சத விகிதத்தை எட்டிப்பிடித்துள்ளது. நிர்வாகத்திறமையிலும், உற்பத்தியின் வேகத்திலும் இதர பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழிகாட்டியாக இந்தத் தொழிற்சாலை விளங்குகிறது.

தினப் பத்திரிகைகளுக்கும், தந்தி அலுவலகங்களுக்கும் உயிர்நாடி போல இருப்பது டெலிபிரிண்டர். பார்ப்பதற்கு 'டைப்ரைட்டர்' போல இருக்கும் இந்த டெலிபிரிண்டர் இயந்திரத்தின்மூலம் டைப்ரைட்டரைப்போலவே செய்தியை டைப் அடித்து அதே சமயத்தில் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள தூரத்தில் அந்த செய்தியானது எழுத்து வடிவத்திலேயே நொடிப்பொழுதில் கிடைக்கச்செய்ய முடியும். தந்திகம்பிகளைப் போல விசேஷ கம்பிகள்மூலம் மின்சார உதவியுடன் இந்த பிரிண்டர் இயங்குகிறது.

தந்திச்செய்திகளை அனுப்புவதற்குசிரமமானமார்ஸ் தந்தி முறையை உபயோகிப்பதற்குப் பதிலாக டெலிபிரிண்டர் யந்திரங்களைப் பயன்படுத்தும் சுலப முறை வேகமாக அதிகரித்து வருகிறது

டெலிபிரிண்டர் யந்திரங்களைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையானது சென்னை கிண்டியில் 1961ம் ஆண்டில் இயங்க ஆரம்பித்தது. இத்தாலி தேசத்தைச் சேர்ந்த 'ஒலிவிட்டி' கம்பெனியின் ஒத்துழைப்புடன் நிறுவப்பட்ட இந்தத் தொழிற்சாலையானது கடந்த 8 வருட காலத்தில் 14,000-க்கு மேற்பட்ட யந்திரங்களைத் தயாரித்துள்ளது. இந்தத் தொழிற்சாலையின் உற்பத்தி இந்த ஆண்டிலிருந்து பெருமளவுக்கு அதிகரிக்கும். இனி ஆண்டுதோறும் 5500டெலிபிரிண்டர்கள் இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும். டெலிபிரிண்டருக்கு வேண்டிய முக்கிய சாதனங்களும் இந்தத்தொழிற்சாலையில் உற்பத்தியாகின்றன.

டெலிபிரிண்டர் யந்திரங்களை பொறுத்தவரை நாட்டின் யதேவையை இந்தத் தொழிற்சாலை ஏற்கனவே பூர்த்திசெய்துவிட்டது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் இந்த நிறுவனம் ஆரம்பித்துவிட்டது.

### இலங்கைக்கு

1967 - 68-ம் ஆண்டில் 2 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள டெலிபிரிண்டர் யந்திரங்களை இலங்கைக்கு இந்தத் தொழிற்சாலை ஏற்றுமதி செய்தது. இனிப் படிப்படியாக பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யஇந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கும்.

ஆங்கிலமொழி டெலிபிரிண்டர்கள், இந்தி டெலிபிரிண்டர்கள் என்று 2 மொழிகளில் தற்போது டெலிபிரிண்டர்கள் தயாரிக்கப்படுகின்றன.

அராபிய மொழியின் எழுத்துக்களைக் கொண்ட டெலிபிரிண்டரைத் தயாரிக்கும் வேலையை ஆரம்பிக்க தற்போது ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன அரபு நாடுகளிடமிருந்து ஆர்டர்கள் வந்ததும் இந்த அரபுமொழி டெலிபிரிண்டர்களை இந்தத் தொழிற்சாலை உருவாக்கும்.

### தமிழ்மொழி டெலிபிரிண்டர்

தமிழ்மொழி எழுத்துக்களைக் கொண்ட டெலிபிரிண்டர்களைத் தயாரிக்கும் திட்டமொன்று தற்போது பரிசிலனையில் இருந்துவருகிறது. டெலிபிரிண்டரின் தேவைக்கு ஏற்றபடி தமிழ் எழுத்துவடிவமைப்பைமாற்றுவதுபற்றி தமிழ்நாடு அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது.

அவ்விதம் மாற்ற முடிந்தால் தமிழ் டெலிபிரிண்டர்களைத் தயாரிக்க முடியும். ஆண்டுதோறும் குறைந்தபட்சம் 500 டெலிபிரிண்டர்களுக்கு ஆர்டர் கிடைத்தால் தமிழில் டெலிபிரிண்டர்களைத் தயாரிக்கமுடியும் என்று இந்துஸ்தான் டெலிபிரின்டர் நிறுவனத்தின் நிர்வாக டைரக்டர் ஜி. யூ. மேனன் கூறினார்.

அண்மையில் மத்திய அரசாங்க செய்தி போக்குவரத்து இலாகாவில் டில்லியிலிருந்துவந்த பத்திரிகையாளர்கள் கோஷ்டியும், சென்னை நகரப் பத்திரிகையாளர்கள்கோஷ்டியும்இந்த தொழிற்சாலையைப் பார்வையிட்டனர். அவர்களுக்கு தொழிற்சாலையின் பல்வேறு பகுதிகளை ஜி. யூ. மேனன் சுற்றிக்காண்பித்து அதன் சிறப்பு அம்சங்களை விளக்கினார்.

சாதாரணமாக எந்தப் பொதுத்துறை நிறுவனமோ அல்லதுதனிப்பட்ட தொழிற்சாலையோ செய்திருக்காத ஒரு முக்கிய சாதனையை இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் செய்துள்ள விலைவாசிகள் விஷம்போல் ஏறிவருகிற இந்தக்காலத்தில்

இந்த நிறுவனமானது கடந்த ஓர் ஆண்டு காலத்திற்குள் டெலிபிரிண்டர் விலையில் ரூ. 1400 விலை குறைப்பு செய்துள்ளது. 1968 ஏப்ரல, 1968 அக்டோபர் 1969 ஏப்ரல ஆகிய 3 மாதங்களில 3 தடவை விலை குறைப்பு செய்யப்பட்டது. 1968 மார்ச் மாதத்தில் 7000 ரூபாயாக விற்கப்...

மென்று சொல்லுகிறோம்;

## செனட்டர் சு. நடராசா உரை (6)

# கோணேஸ்வராலயப் பிரச்னை: செனட்டர் நடராஜா விளக்கம்

**செனட் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் சு. நடராசா திருத்தப்பிரேரணைகொண்டு வந்து ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது**

இவ்வளவு காலமும் நான் இரண்டாவது பிரே... சைவர்களுடைய ஆலயம் ரணைக்கு வருவதற்கு முன் என்று கணிக்கப்பட்ட...

...கத்தோடுதான் தமிழ்ப் பிள்ளைகளும் சிங்களப் பிள்ளைகளும் படித்துவருகிறார்கள். இன்று டாக்டர்களாகத் தேர்ச்சிபெற்று வைத்தியப் பட்டம் பெற்றவர்களின் ... அவர்கள் வெளி ... உத்தியோகம் கொடுப்போம் என இந்த அரசாங்கம்...

# ஜயாறன் எழுதுவது

"இந்திராவை வெளியேற்று" என்று ராஜாஜி யுத்த கோஷம் கிளப்பியுள்ளார். "இந்திராகாந்தி பிரதமர் பதவிவகிக்கத் தகுதியற்றவர். அப்பதவியிலிருந்து அவரை நீக்க தக்க நடவடிக்கை எடுக்காவிடில் இந்தியா சீக்கிரத்தில் ரஷ்யாவைச் சுற்ற வேண்டியிருக்கும் அல்லது சீனத்தின் வலையில் விழுந்துவிடக்கூடும்" என்று அவர் எச்சரித்துள்ளார்.

வங்கிகளை தேச உடைமையாக்கியதை, அவர் ராமாயணத்திலே மாயமானுக்கு ஒப்பிடுகிறார். "மாயமான் வேண்டுமென்ற சீதை மயங்கி பிடிவாதம் செய்தாள். முடிவில் என்ன ஆயிற்று? அதுபோலவே வங்கிகளை தேச உடமையாக்கினால் மிக நல்லதென்றும் பலருடைய பாராட்டுதலைப் பெறலாமென்றும் இந்திரா மயங்கியிருக்கிறார். முடிவில் இது நாட்டுக்கே பெரிய ஆபத்தாக முடியும்" என்கிறார் ராஜாஜி.

0 0 0

குட்டிக்கதைகள் சொல்லுவதில் அவர் இணையற்றவர். ஆனால் சீதை பிடிவாதம் செய்யும்போது அங்கு ராஜாஜி இருந்திருப்பின், ராமனுக்கு "சீதையை வெளியேற்றிவிடு' என்றுதான் யோசனை கூறியிருப்பாரோ!

எல்லாம் எப்போதோ முடிந்த காரியம். இராமாயணம் நடப்பதை யார்தான் தடுக்க முடியும்? பிரதமர் பதவி வகிக்க இந்திராவுக்குத் தகுதி உண்டுஎன்றே காங்கிரசும் பொது மக்களும் அவருக்கு அப்பதவி அளித்துள்ளனர். அவரது யோசனையை காங்கிரசும் அங்கீகரித்துவிட்டது. லோக் சபையிலும் இது சுலபமாக நிறைவேறிவிடலாம். அப்படி இருக்க "இந்திராவை வெளியேற்று" என்று யாருக்கு யோசனை கூறுகிறார் ராஜாஜி!

0 0 0

'டெயிலிநியூஸ்' பத்திரிகை ஆசிரியர் ஏர்னஸ்ட் கொரியா, சென்னைக்குச் சென்று அங்கு ராஜாஜி, ம. பொ. சி., தி. மு. க. தலைவர்களை நேரில் கண்டு பேசிவிட்டு தமது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். தி. மு. க. ஆட்சியாளருக்கு பல பல பிரச்னைகள் இருப்பதாயும், இலங்கையை விழுங்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்குச் சிறிதுமில்லை என்றும் கூறுகின்றார். "இலங்கையை விழுங்க வேண்டுமென்று எண்ணக்கூடிய அவ்வளவு பெரிய முட்டாள்கள் இங்கு யாருமில்லை" என்றுராஜாஜி பலமாக மறுத்திருக்கிறார்.

இலங்கையிலிருந்து ஒரு பிரபல பத்திரிகையின் ஆசிரியர் நேரில் சென்னைக்குச் சென்று தமிழ்த் தலைவர்களைக் கண்டு பேசி உண்மையை அறிந்து வெளியிட்டது வரவேற்கத்தக்கதே. ஆனால் பொதுத் தேர்தல் நெருங்குவதால், தி. மு. க. வையே நம்பி தேர்தல் பிரசாரம் செய்து இங்கு துவேஷம் கிளப்பி வெற்றிபெற கோட்டை கட்டியுள்ளவர்கள், 'டெயிலிநியூஸ்' ஆசிரியர் கூறுவதைக் கேட்டு தங்கள் பிரசாரத்தை நிறுத்துவார்களா? அவர்களுக்கு எல்லாம் தெரியும். தூங்குபவனை எழுப்பலாம்; ஆனால் தூங்குவதுபோல் பாசாங்கு செய்பவனை எழுப்ப முடியுமா?

0 0 0

சந்திரனுக்கு யாத்திரை சென்ற அதிசய விவரங்களை இலங்கை வானொலி ஒன்றுதான் தமிழில் அவ்வப்போது, உடனுக்குடன், சமகால மொழியெர்ப்பைத் தந்ததாம். இந்திய வானொலி அப்படி எதுவும் செய்யவில்லை என்றும்வெளிநாடுகளிலுள்ள தமிழர்களும் இலங்கை வானொலியைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதுவதாக அறிய வந்தேன்.

அன்பர் வி. சுந்தரலிங்கம், செ. குமாரசாமி, கலாநிதி மகாதேவா, ஆனந்தசிவம், பேராசிரியர் மயில்வாகனம் முதலியோரே சமகால மொழி பெயர்ப்பும், விளக்க உரைகளும் கூறினார்களாம். அவர்களுக்கும் இலங்கை வானொலி நிலையத்துக்கும் பாராட்டுகள்.

0 0 0

நானோர் என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார், வானோர் பிரான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லரசு கோஷ்டியுடனும் கூட்டுச்சேராமல், எல்லா நாடுகளுடனும்நட்புக்கொண்டிருக்கும் மேலான வெளிநாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாலும், நமது எல்லைப் பிரச்னைகள் இல்லாமையாலும் இது சாத்யமானேன்றது. இந்த மேலான கொள்கையை எக் காரணம் பற்றியும் நாம் கைவிடமுடியாது பாதுகாப்புச் செலவுகள் குறைவாக இருப்பதால் தான், இலவச அரிசி, இலவசக் கல்வி முதலிய சமூக நல சேவைகளை அரசாங்கம் செய்யக் கூடியதாகவுள்ளது.

விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு முதலிய அமைச்சுகளுக்கு நடப்பு வருடத்தைவிட அதிகப்படி எதிர்பார்ப்பதுடன் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவிகளைக்கொண்டும் இந்த அதிகச் செலவை நிதி அமைச்சர் ஓரளவு சமாளிக்கலாம். இதேசமயம் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதில் ஏற்படும் 13 கோடி ரூபாய் அதிகச்செலவு இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை இதை எல்லாம் பார்க்கையில், துண்டுவிழும் பெருந்தொகையை சமாளிக்க புதிய விதிகளை அவர் விதிக்கப் போகிறாரா? பொதுத்தேர்தல் வருவதால், பொதுமக்களின் அதிருப்தியைப் பெறக்கூடிய முறையில் புதிய வரிகளை அரசாங்கம் விதிக்கத்துணியாதென்றே எதிர்பார்க்கலாம்.

# ‘சுகாதாரம்’ அழுகிறது!

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள ஒரு மின்சாரக் கம்பம். அந்தக் கம்பத்தின் கீழிருந்து சுமார் ஐந்தரை அடி உயரத்தில் சொறி பிடித்ததுபோல் ஏதோ எல்லாம் ஒட்டிக் கொண்டிருப்பதை பலர் பார்த்திருப்பீர்கள். ‘அதற்கிப்பொழுது என்ன? கிடந்தால்கிடந்துவிட்டுப்போகட்டுமே?’ சுகாதாரத்தின் தலையில் அடிகள் விழுந்து அது நசிபடுவது இவ்வித கேள்விகளால்தான்.

எத்தனையோ பேர் அலட்சியமாகத் தடவிய சுண்ணும்புதான் அந்தக் கம்பத்தை ஒரு குஷ்டரோகி போல் ஆக்கியிருக்கிறது. ஒவ்வொருவரும் சிறிது சிந்தித்திருந்தால் இவ்வித நிலை அந்தக் கம்பத்துக்கு ஏற்பட்டிருக்காது. சுண்ணும்பு மலிவாக (இலவசமாகக் கூட சில இடங்களில் கிடைக்கிறது) கிடைக்கிறது தானே யென்று ஒரு கோலுக்கோலி வெற்றிலையுடன் வாயுள் போனதுபோக மிகுதியை எங்கே துடைப்பது என எண்ணும்போது அந்தக் கம்பம் கண்முன்தெரிவதால் தான் இந்த பரிதாபநிலை அந்தக் கம்பத்துக்கு ஏற்பட்டுள்ளது. இதனுல்சுகாதாரம் அழுகிறது.

**குடும்பக்கட்டுப்பாடும் சுகாதாரமும் தனி மனிதனுல் மட்டும் சாதித்து வெற்றி காணமுடிந்தவை. அதில் ஏகோபித்த உழைப்பு தேவை. அப்போது தான் வெற்றியை அனுபவிக்க முடிகிறது.**

சுகாதார வாரம் என்ற சப்தம் இப்பொழுது மெதுவாகக் கேட்கத் தொடங்கியுள்ளது. ‘சுகாதார வாரம் சுகாதார வாரம்’ என்று வருடத்துக்கொருமுறை சொல்லிக்கொண்டு சுகாதாரத்தைப்பற்றி நன்கு தெரிந்தவர்கள் நான்கு வார்த்தை அழகாகப்பேசி விட்டால் மட்டும்சுகாதாரம் ஏற்பட்டுவிடாது. சுகாதாரம் பரவலாக ஏற்படவேண்டுமானுல் அதற்கு ஓய்வற்ற தொடர்ச்சியான ஏகோபித்த உழைப்பு தேவை. அது ஒருபுனிதமான கடமையென்பது உணரப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். சிறிது சிறிதாகச் சேர்த்து கட்டப்படும் கட்டடம் சுகாதாரம்.

நகரத்தில் வாழ்கிறோம் என்ற பெயர் தான். அப்பா ஒரே நுளம்புக்கடி இன்னும் எத்தனையோ ‘தொல்லைகள்’ இவ்விதம் வரி இறுப்பாளர்கள் வரிசையாக முணுமுணுப்பது எப்போதும் இங்கு கேட்டுக்கொண்டு தானிருக்கிறது. ஒருவீட்டில் இப்போது (ஜனப்பெருக்கம் காரமாக) எத்தனை பேர் வாழ்கிறார்கள்? இவ்வித நிலையில் சுகாதாரம் நெருக்கடிக்குள்ளாவது சகஜம். இந்த நிலையைப்போக்குவதற்கு, மக்கள் மறந்துவிட்ட சுகாதாரப் பரிசோதகர்கள் சிறிது சுறுசுறுப்பாக இயங்க முன்வரவேண்டும். எங்கே நீர் தேங்கி ஓடமுடியாது தவித்து நிற்கிறதோ அங்கே அவர்கள் ஓடிவரவேண்டும். அப்போது தான் அழுக்கு ஓடும். சுகாதாரம் சிரிக்கும். அரசாங்க அதிகாரிகள் மக்களைப் பய

(8-ம் கலம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தெரிவிக்கும் பிரேரணைக்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த செனட்டர் சு. நடராசா திருத்தப்பிரேரணைகொண்டு வந்து ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது

இவ்வளவு காலமும் சைவர்களுடைய ஆலயம் என்று கணிக்கப்பட்ட இடத்தை ஒருபுனித ஆலயத்தை ஆயிரக்கணக்கான சைவ மக்கள் போகின்ற ஒரு புராதன ஆலயத்தைத் தமிழ்மக்களின் ஆதிக்கத்தில் கொடுக்கச்சொல்லி நாம் கேட்கவில்லை. இந்த இடத்தைப் புனித நகராக்குங்கள் என்று தான் கேட்டோம். அந்தக் கோரிக்கையைத் தனது அதிகாரத்தின்கீழ் நிறைவேற்றக்கூடியதாக இருந்தாலும், அதைப் பற்றிப் பிரதமமந்திரி அவர்களின் இலாகாவுடன் கேட்டுத் தான்செய்யவேண்டுமென்ற காரணத்துக்காக அவ்விதம் செய்து. அதன் பலனுக ஒரு விசாரணைச் சபையை அன்றைய உள்ளூராட்சி மந்திரி அவர்கள் நியமித்தவுடன் பிக்கு ஒருவர் பிரதம மந்திரி அவர்களுக்கு அதைப் பற்றி மாருக எழுதியபோது ‘‘அதைப்பற்றி விசாரிப்போம்; விசாரணைச் சபையும் தனது விசாரணையை நடத்தட்டும் என்று சொல்லாமல் ‘‘இல்லை நிற்பாட்டு விசாரணை நடத்தவேண்டாம்’’ என்று பிரதமர் ஒரு மந்திரிக்குச் செய்தால் எவ்வாறு கௌரவத்துடன் அந்த மந்திரி மந்திரிசபையிலே இருக்கலாம்; இது இன்று நேற்று நடக்கிற சம்பவமில்லை. காலத்துக்குக் காலம் வசதிக்கு ஏற்றவாறு தமிழனை அழைத்து அரசாங்கத்தை அமைத்து மந்திரிகளாக வரலாம்; பிரதம மந்திரியாகவும் வரலாம். அதன்பின் தமிழனுடைய தேவை அவர்களுக்கு வேண்டியதில்லை. பின்னர் தேர்தல் காலம் வந்ததும் ‘யார் சிங்கள மக்களைக் கூடுதலாக ஆதரிக்கின்றார்கள்? யார் தமிழ்மக்களைக் கூடுதலாகப் புறக்கணிக்கின்றார்கள்’ என்பதைச் சிங்கள மக்களுக்குக் காட்டி வாக்கைப் பெற முயற்சிப்பார்கள்.

1965, 1966, 1967, 1968ஆம் ஆண்டுகள்வரை திருவாளர் திருச்செல்வம் அவர்கள் மந்திரிசபையில் கடமையாற்றினார்கள். 1968 ஆம் வருடக் கடைசிப்பகுதி. தேர்தல் வரப்போகிறது. எந்தநேரமோ ஏதோ தெரியாது. இரண்டு கட்சிகள் நேருக்குநேர் போட்டிபோடுகின்றன யார் தமிழனை ஒழிக்கக் கூடியவர்களோ அவர்களுக்கே சிங்களநாட்டில் ஆதரவு. அதை யோசித்துத்தான் இதனைச் செய்திருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த வேண்டும்.

நான் இரண்டாவது பிரேரணைக்கு வருவதற்கு முன்னர், என்னுடைய முதல் திருத்தப் பிரேரணையில ஒவ்வோர் அங்கத்திலும் ஆதாரபூர்வமாக, எதற்காக தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தில வெறுப்புக்கொள்கிறார்கள், எதற்காக இந்த அரசாங்கத்துககு ஆதரவு கொடுகக மறுத்து எதிர்க கட்சியிலிருந்து பேசககூடிய நிலை ஏற்பட்டதென்று சொலலிவைத்தேன். இரண்டாவது திருத்தப்பிரேரணைக்கு வரும்போது அதைப் பற்றி முதன்முதலாக திருத்தப் பிரேரணையைப் பிரேரித்து செனெற்றர் ரெஜி பெரேரா அவர்கள் பேசிவிட்டார்கள், அதாவது உத்தியோகம் இலலாமல தவிககும் இளைஞர்களுடைய பிரச்னையே அது. இன்று இந்தத் தேசிய அரசாங்கம் இந்த நாட்டின் வாழ்ககைச் செலவு அதிகரிகக காலாய் இருககிறதென்று கௌரவ செனெற்றர் ரெஜீ பெரேரா சொன்னார். படித்த பட்டதாரிகளுககு உத்தியோகம் இலலையென்ற பிரச்னை இன்று நேற்று ஏற்பட்டதலல. அவர் சொன்னது போல அது ஒருவருடைய குற்றமென்று சொல்ல முடியாது. இந்தத் தேசிய அரசாங்கம் ஆக்கப்படும் நேரத்தில் அதாவது 1965-ம் ஆண்டு ஐம்பதினாயிரம் பேர் உத்தியோகம் இல்லாமல் இருந்தார்கள். உத்தியோகமிலலாத நிலை சென்ற அரசாங்கத்தால வந்ததுமட்டுமலல. எமது கொள்கையின் காரணமாக கலவித் திட்டத்தின் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இன்று லட்சக்கணககான மககள் உத்தியோகம் இலலாமல இருககிறார்கள். பட்டதாரிகள் உத்தியோகம் இலலாமல இருககிறார்கள். ஆனல அவர்களுககு இடம் இருககின்றது. பள்ளிககூடங்களில போதிய ஆசிரியர்கள் இலலை என்றும் பட்டதாரிகள் வேண்டுமென்றும் கேட்கிறார்கள். ஆனல கஜானவில பணம் இல்லை என்று அரசாங்கம் சொல்கின்றது.

செனட்டர் நியதபால: மூன்று வருடங்களாக எங்கே இருந்தீர்கள்?

செனட்டர் நடராஜா: நாங்கள் இருந்த இடத்தில தான் இருந்தோம்.

கௌரவ உப தலைவர் அவர்களே, இந்த நாட்டில், தங்கள் கல்வி முடிந்தவுடன் நாம் என்ன உத்தியோகம் பார்ப்போம் என்ற நோக்களும் சிங்களப் பிள்ளைகளும் படித்துவருகிறார்கள். இன்று டாக்டர்களாகத் தேர்ச்சிபெற்று வைத்தியப் பட்டம் பெற்றவர்களின் கதியென்ன? அவர்கள் வெளி வந்தவுடன் உத்தியோகம் கொடுப்போம் என இந்த அரசாங்கம் சொல்லிக் கொண்டிருந்தது. இன்று சிங்களப் பிரதேசங்களிலும் சரி, தமிழ்ப் பிரதேசங்களிலும் சரி வைத்தியர்கள் குறைவாக இருக்கிறார்கள். ஆசுப்பத்திரிகளில் போதிய வைத்தியர்கள் இல்லை. இப்படியிருக்கும் போது ஏன் இந்த வைத்தியர்களை அரசாங்கம் எடுக்கவில்லை. ஆனல், இரண்டு மூன்று கிழமைக்குமுன்னர் 38,000 பேர்களுக்கு இந்த வருடம் முடியுமுன்னர் உத்தியோகம் கொடுப்போம் என்று அரசாங்கம் கூறியதாக ஒரு விஷயம் காணப்பட்டது. இதுதான் பிழை. ஏன் இப்படிச் சொல்லவேண்டும்? 38,000 பேருக்கு இந்த வருடம் முடியுமுன்னர் உத்தியோகம் கொடுப்போம் என்று சொன்னல் உத்தியோகம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். அவ்விதம் கொடுக்க வசதிசெய்யவேண்டும். ‘தேர்தல் வருகிறது; 38,000 பேருக்கு உத்தியோகம். தமிழர்கள் எல்லோரும் எங்களுடன் சேருங்கள்; உங்களுக்கு மாவட்ட சபை கொடுப்போம்’. இவ்விதம் ஒவ்வொரு விஷயத்திலும் கூறி ஏன் வீணக மக்களை ஏமாற்றி, நாட்டை ஏமாற்றி, இனத்தை ஏமாற்றி வருகிறீர்கள்? 50,000 பேர் உத்தியோகம் இல்லாமல் இருந்தபொழுது ஏன் அந்தநேரம் இந்நோய்க்கு மருந்து தேடாமல் அந்தத் தொகையை ஒருஇலட்சம் வரை கூட விட்டீர்கள். 12,000 பட்டதாரிகளுக்கு உத்தியோகமில்லாமலிருக்க, 500க்கு மேற்பட்ட வைத்தியநிபுணர்களுக்குஉத்தியோகமில்லாதிருக்க நாம் வருட முடிவுக்குள் இன்னும் 38,000 பேருக்கு உத்தியோகம் கொடுப்போமென்று சொன்னல் அது நடக்குமா? கட்டாயமாக இதைச் செய்வீர்களா என்று தான் கேட்கிறோம். மக்கள் இதை நம்புவார்களா? ஏன் இதைச் சொல்லுகிறீர்கள்? ஏன் மக்களை ஏமாற்றுகிறீர்கள்? இந்த நாட்டுப் பொருளாதாரம் சரியில்லை; இதைச் செய்ய முடியாது என்று சொல்லுங்கள்.

அடுத்தபடியாக எங்களுடைய வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும். எங்கள் வாழ்க்கைத்தரம் வளரவில்லை; ஆனல் வாழ்க்கைச்செலவு வளர்ந்து கொண்டுபோகிறது. நாம் உள்நாட்டுப் பொருட்களை விருத்திசெய்ய வேண்டு

ற்சாலையோ செய்திருக்காத ஒரு முக்கிய சாதனையை இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனம் செய்துள்ள விலைவாசிகள் விஷம்போல் ஏறி வருகிற இந்தக்காலத்தில்

மென்று சொல்லுகிறோம்; உள்நாட்டுப் பொருட்களை விருத்திசெய்யும் நேரத்தில் அவை தரமுள்ளவையா என்று பார்க்கவேண்டும். சாதாரணமாக நாங்கள் பாவிக்கின்ற சவரத் தகடுகளை (Blades) எடுத்துக்கொள்வோம். இந்த நாட்டிலே அவற்றைச் செய்வதற்கு மூலப் பொருட்கள் இல்லை. பிற நாட்டிலிருந்து தான் மூலப்பொருட்கள் வரவேண்டும். பிற நாட்டிலிருந்து மூலப் பொருட்கள் வந்தால் நாம் சவரத்தகடுகளை கூடிய காலம் பாவிக்கக் கூடிய வகையிலே உற்பத்திசெய்ய வேண்டும். அப்போதுதான் எங்கள் நாட்டுப் பொருட்களைப் பாவிக்க எல்லோரும் விரும்புவார்கள். இந்நாட்டுப் புடவைகளைப் பொறுத்த வரையில் அவற்றைப் பாவிக்க இந்நாட்டு மக்கள் விரும்புகிறார்கள். ஆனல் பிற ஊர்ச்சாமான்கள் நல்லனவாக இருந்தால் நல்ல பொருட்களுக்கு ஆசைப்படுவது மனித இயல்பு—மனிதப் பண்பு. அதைக் குறையாகச் சொல்லக்கூடாது. நாம் புடவை உற்பத்தியில் தரத்தைக் கூட்டிக்கொண்டு தான வருகிறோம். ஆனல் சவரத் தகடுகளை எடுத்துப் பார்த்தால் பிற நாட்டுச் சவரத்தகடுகளை ஒரு மாதத்திற்கு மேல் பாவிக்கலாம். இந்நாட்டுச் சவரத் தகடுகளை ஒருநாளைக்குத் தான் பாவிக்கமுடியும். இவ்வாறு தரம் குறைந்த பொருட்களை நாம் செய்வதனல் எமது வெளிநாட்டுச் செலாவணி தான் வீணே விரயமாகும். நம் நாடு சிறப்புற வேண்டும்; உள் நாட்டுப் பொருட்களின் உற்பத்தி கூடவேண்டுமென்பதை ஒருவரும் மறுக்கவில்லை. எங்கள் சீமெந்துத் தொழிற்சாலையை எடுத்துக்கொள்வோம். அந்நியநாட்டுச் சீமெந்தை நாம் பெறுகின்ற விலையிலும் பார்க்க உள்நாட்டுச் சீமெந்தின் விலை கூடுதலாக இருந்தால் அதனல் என்ன பலன் இருக்கிறதென்று தான் நான் கேட்கின்றேன். நாங்கள் எங்கள் நாட்டை விருத்தியடையச் செய்ய வேண்டுமென்றால் அதற்குத் தகுத்த வகையில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும் அப்படிச் செய்தால் தான் நாம் முன்னேறலாம். முன்னேற்றப் பாதையை எந்தக் கட்சி ஆதரிக்கிறதோ அந்தக் கட்சியே முன்னேறுமென்றுகூறி நான் எனது உரையை முடிக்கின்றேன். (முற்றும்)

பு செய்துள்ளது. 1968 ஏப்ரல, 1968 அக்டோபர் 1969 ஏப்ரல ஆகிய 3 மாதங்களில 3 தடவை விலை குறைப்பு செய்யப்பட்டது. 1968 மார்ச் மாதத்தில் 7000 ரூபாயாக விற்கப்பட்ட டெலிபிரிண்டர் 1960 ஏப்ரல் மாதத்திலிருந்து 5600 ரூபாயாக விற்கப்பட்டு வருகிறது. ஆனல் இத்தாலி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற டெலிபிரிண்டரின் விலையோ 11550. அதாவது சென்னையில் தயாரிக்கப்படுகிற டெலிபிரிட்டரின் விலையானது வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் டெலிபிரிண்டர் விலையில் பாதிக்கும் குறைவு. தரத்தில் எதற்கும் குறைந்ததல்ல.

டெலிபிரிண்டர்களின் விலை குறைக்கப்பட்டதற்கு 2 முக்கிய காரணங்கள் உண்டு. 1. உற்பத்தி வேகமாக பெருகியுள்ளது. 2. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உறுப்புகளில் பலவற்றுக்குப் பதிலாக உள்நாட்டு உறுப்புகள் தற்போது உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்துஸ்தான் டெலிபிரிண்டரில் உள்ள உறுப்புகளின் எண்ணிக்கை சுமார் 2700. அவைகளில் சுமார் 17 உறுப்புகள் தான் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவையாகும். ஒவ்வொரு டெலிபிரிண்டரிலும் உள்ள இறக்குமதி உறுப்புகளின் விலை மதிப்பு சுமார் 610 ரூபாய்தான். அதாவது டெலிபிரிண்டர் விலையில் 10 சத விகிதத்திற்கும் குறைவு.

1000க்கு மேற்பட்டவர்கள் பணியாற்றி வருகிற இந்துஸ்தான் டெலிபிரிண்டர் நிறுவனத்தின் எதிர்காலம் தொடர்ந்து பிரகாசமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

— துளசிராம்

## பாரதி விழா ஏற்பாடுகள்

இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப் பாட்டுத் திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் இம்முறையும் வழமை போலப் பாரதி விழாவைக் கொண்டாடுவதெனத் தீர்மானித்துள்ளது செப்டெம்பர் மாதம் பாரதி விழா நடைபெறும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத் தமிழ் மன்றம்’ சட்டக் கல்லூரி மாணவர் மன்றம், கட்டுப்பத்தைத் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ் மன்றம் ஆகியனவும் பாரதி விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன.

ங்கை வானொலி நிலையத்துக்கும் பாராட்டுகள்.

0 0 0

நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார், வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி, ஊனார் உடை தலையில் உண்பலிதேர் அம்பலவன், தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும் பீ.

— மாணிக்கவாசக சுவாமிகள்

(2-ம் கலத் தொடர்ச்சி)

முறுத்துவதற்காக நியமிக்கப்பட்டவர்களல்லர். மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை சீராக நிறைவேற்றுவதற்காகவே நியமிக்கப்பட்டவர்கள் என்பது இப்போது பலர் மறந்த சங்கதி.

யாழ்ப்பாணம் புதிய பஸ் நிலையத்துக்குப் பக்கத்திலுள்ள மலசலகூடத்தைச் சுற்றி நிற்கும் மிட்டாய் வண்டிகள் அவற்றைச் சுற்றி நிற்கும் ஈக் கூட்டம். இவை பற்றி சுகாதார பரிசோதகர்களோ அல்லது அவர்களைப் பரிசோதிப்பவர்களோ இதுவரை கவனியாதிருந்து கொண்டு மலசலகூடத்துச் சுவரில் சுகாதார வாரம் என்ற பெரிய நோட்டீசுகளைஒட்டுவதால் சுவரின் அழுக்கு மறையுமேயொழிய சுகாதாரம் வெளிப்படாது.

எல்லோரும் பிழைக்க வேண்டும் என்ற நியதியை மாற்றச்சொல்லவில்லை. ஆனல் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சிலதும் பிழைத்தால்தான் மனிதன் இந்த உலகில் பிழைத்து வாழலாம்.

நமது தெருக்கள் சுகாதாரத்தின் ‘நல்ல வழி காட்டிகள்!’ காற்றில்லாத பிரதேசத்தில் மனிதன் எப்படித் தாவித்தாவி நடக்க வேண்டுமென்பதை நமக்கு சந்திரனிலிருந்து திரும்பிவந்த ஆம்ஸ்ட்ரோங் கற்பித்துத்தந்திருக்கிறார். இதனல் காற்றுள்ள இந்த வீதிகளில் இப்போது வாவி நடப்பது நமக்குமிக சுலபமாகியுள்ளது. எனவே இவற்றுக்கு கற்களைப் போட்டு தாரை ஊற்ற வேண்டியது இப்போது அவ்வளவு அவசியமில்லை!

‘இந்தப் பொது மக்களுக்கு என்ன செய்தாலும் திருப்தி வராது’ என்று பொறுப்புள்ள உறுப்பினர் சிலர் புறுபுறுப்பது காதில் கேட்கிறது. என்ன செய்வது. நீங்கள் தானே சுகாதாரத்தை அனுசரிக்கும்படி சொல்கின்றீர்கள்!

சுகாதாரம் தனி மனிதனின் சொத்தல்ல!

— கணேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org